# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk



[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே


சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 01 வியாழக்கிழமை (14.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147

# மதுவுக்காக அலை மோதிய கூட்டம்

## கண்டும் காணாமல் வேடிக்கை பார்த்த பொலிஸார்





## ராஜித சேனாரத்ன

# கைதாகி மறியலில்

## தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்



*(கொழும்பு)* முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றவியல் விசாரணைப் பிரிவில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் ராஜித சேனாரத்னவை தனிமைப்படுத்தலின் பின் சிறைக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. *(15ஆம் பக்கம் பார்க்க)*

# நல்லூர் பிரதேச சபை ஊழியர் மீது வாள்வெட்டு

## இணுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை ஊழியர் ஒருவர் மீது நேற்று வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் படு 15

## எதிர்வரும் திங்கள் முதல்

# மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து ஆரம்பம்

## அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் அது குறித்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாவும் போக்கு 15

## எதிர்வரும் நாட்களில்

# நாடு முழுவதும் மழை பொழியலாம்

(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக எதிர்வரும் சில 15



# வாரத்தில் 7 நாட்களும் பாடசாலைகள் இயங்கும்

## கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

கொரோனா தொற்று நோய்க்குப் பின்னர் கல்வியில் இழந்த வாய்ப்புகளைப் பிடிக்க வாரத்தின் ஏழு நாட்களும் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிறிய குழுக்களாக வகுப்புகள் நடத்தப் 15

## கொரோனா

# 893

(கொழும்பு)

கொரோனா வைரஸ் குடும்பத்தின் 15

## உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து

# விடுவிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளுக்கு உறுதி வழங்க

## அவகாசம் தேவை என அரசு நீதிமன்றுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களுக்காக அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட தமிழர்களின் காணிகளில் 50 சத வீதமானவை, மீள உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான உறுதிப்பத்திரங் 15

## பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில்

# முன்னணியின் ஏற்பாட்டில் செம்மணியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, பொலிஸ் கெடுபிடிகளுக்கு மத்தியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் செம்மணிப் பகுதியில் நேற்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தப் 15

## ரணில் அரசாங்கத்திலிருந்து

# 19 அமைச்சர்களுக்கு எதிராக நிதி மோசடிப் பிரிவில்

## விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளது

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் ரணில் விக்கிரமசிங்க உட்பட 19 முக்கிய அமைச்சர்களுக்கு எதிராக நிதி மோசடிப் பிரிவில் விசாரணைகள் முன்னெடுக் 15

# விசாரணைகள் முடியும் வரை

## விருப்பு இலக்கங்கள் விநியோகிக்க முடியாது

(கொழும்பு)

பொதுத் தேர்தலை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர் 15

# யாழில் 36 பேருக்கு கொரோனா சோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்றுப் புதன்கிழமை 36 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், எனினும் எவருக்கும் 15

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (15.04.2020) புதன்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் தர்மதுரை கோவிந்தராஜா



அவர்களது மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், எமது இல்லம் வருகை தந்து ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.05.2020) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று, நாளை (15.05.2020) வெள்ளிக்கிழமை 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்திரம்மன் கோவிலடி,
அல்லையம்பதி, துன்னாலை. (C-9582) - குடும்பத்தினர்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

# வற்றாப்பளை கண்ணகையம்மன் வருடாந்த பொங்கல் விழாவிற்கு

## இம்முறை பக்தர்களுக்கு அனுமதியில்லை

(முல்லைத்தீவு)

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவில் இம்முறை பக்தர்களை அனுமதிப்பதில்லையென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புகழ்பூத்த வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா தொடர்பாக நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸார், இராணுவத்தினர் இதில் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் பரவும் அபாயம் காணப்படுவதால் இம்முறை ஆலய பொங்கல் திருவிழாவில் பொதுமக்களை அனுமதிப்பதில்லையென தீர்மானிக்கப்பட்டது.

பக்தர்கள் வீடுகளில் இருந்து வழிபாடுகளில் ஈடுபடுமாறும், பொங்கல் திருவிழா இடம்பெறாமல், ஆலயத்தின் சம்பிரதாய கிரியைகள் மாத்திரம் இடம்பெறும் எனவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம-3)

# சுமந்திரன் உருவப்படத்துக்கு செருப்பு மாலை

## உடனடியாக பொலிஸார் அகற்றினர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் உருவப் பொம்பைமைக்கு செருப்பு மாலை அணிவித்து நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவு தூபிக்கு அண்மையில் நேற்று அதிகாலை வைக்கபட்டிருந்தது.

அந்த உருவ பொம்மையில் தமிழினத்தின் துரோகி என்ற பதாகை தொங்கவிடப்பட்டிருந்தது.

கடந்த சில தினாங்களுக்கு முன்னர் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்துக்களைத் தெரிவித்திருந்த கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆயுதப் போராட்டம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்திருந்தார்.

அவரது கருத்திற்கு கட்சிக்குள்ளும் வெளியிலும் பல எதிர்ப்புகள் வெளியாகியிருந்தது எனினும் குறித்த பதாகை ஒருசில மணி நேரத்தில் பொலிஸாரால் அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,101)

# மணிவிழா

## நாளில் மனதார வாழ்த்துகின்றோம்



## தம்பையா பங்கயச்செல்வன்

(B.sc. - Agriculture - பேராதனை பல்கலைக்கழகம், PGDE-Merit pass, MEd, SLTS-1, SLPS-1)

**சேவை :** ஆசிரியர் - 04.12.1985 - 10.01.1994 (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)
அதிபர் - 11.01.1994 - 19.01.2006 (மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்)
20.01.2006 - 09.05.2010 (மு/மாங்குளம் மகாவித்தியாலயம்)
கோட்டக்கல்வி அதிகாரி 10.05.2010 - 13.05.2020

மகாஜனா தந்த மகத்தான மனிதர்
மங்காத சேவை செய்திட்ட ஆசான்
முல்லையில் கல்வி ஓங்கி உயர்ந்திட
முப்பத்தைந்தாண்டுகள் இடைவிடாது உழைத்தவர்

ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
நேற்றுவரை அன்பர் நேர்வழியில் சென்றவர்
நெற்றிக்கு நேரே பேசும் நெருப்பு
நெறிமுறை நிற்கும் சற்குணசீலர்

செல்லுகள் கடந்த செயற்றிறல் செம்மல்
இயலாது என்ற சொல் சொல்லாத மனிதர்
இறைமையை இறுக்கமாய் பற்றிப்பிடிப்பவர்
இடிகளுக்கு இடியான தொழிற்சங்க வாதி

ஏராய் என்றும் புழுதி உழுதவர்
மாணவப் பயிர்கள் துணுக்காய் வலயத்தில்
செழிக்க வியர்வை சிந்திய வேந்தன்
சீறுவார் ஆனால் வினை செய்ய மாட்டார்

வித்தகர் எங்கள் பங்கயச் செல்வன்
கால வயது அறுபது கண்டு நீர்
அரச சேவைக்கு ஓய்வு கொடுத்தீர்
ஐயா உங்கள் ஆளுமைத் திறத்தை
அவனிக்கு இன்னும் வழங்கிட
வேண்டும்,

கல்வியில் உயர முயலும் எமக்கு
தொடர்ந்தும் துணைநிற்க வேண்டியே
நின்றோம்
நிறைவாய் நீங்கள் இனியும் வாழ
வாழ்த்தி வணங்குகின்றோம்
வாழ்க வாழ்க .....

(C-9583)

வாழ்த்துவோர் : அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விசாரா ஊழியர்கள். ஒட்டுசுட்டான் கோட்டம்.

# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் கண்ணீருக்கும் விரைவான தீர்வு வேண்டும்

## பிரதமரிடம் ஈ.பி.டி.பியின் விசேட பிரதிநிதிகள் குழு கோரிக்கை
## பெயர் விபரங்கள் அடங்கிய மகஜர் அமைச்சரால் கையளிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நீண்டகாலமாக பேசப்பட்டுவந்த நிலையில் அவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர்.

பிரதமரின் விஜயராம இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போதே குறித்த விடயம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கான தீர்வு கோரிய மகஜர் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.


இதன்போது நீண்டகாலமாக சிறைகளிலிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் அவர்களின் பெயர் விபரங்கள் பிரதமரிடம் கையளிக்கப்பட்டன.

அத்துடன் காணாமல் போனவர்களின் உறவினர்களின் கண்ணீருக்கு பரிகாரம் காணப்படுவதை விரைவுபடுத்த வேண்டும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் விசேட குழுவினரால் பிரதமரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் விவசாயத்திற்குப் பொருத்தமான தரிசு நிலங்களை விடுவித்து விவசாயம் செய்ய ஆர்வமுள்ளவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து விவசாய நடவடிக்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க ஏது நிலைகளை உருவாக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் கல்வியில் பெரு வீழ்ச்சி கண்டுள்ள யாழ்.மாவட்டத்தை அதிலிருந்து மீட்டு முன்னேற்றுவது தொடர்பாகவும் அதற்கான வழிமுறைகளை உருவாக்குவது தொடர்பாகவும் பிரதமரிடம் குறித்த கட்சியின் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் தீவகப் பகுதியில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறைக்கு தீர்வுகாணும் முகமாக கடல் நீரை நன்னீராக்கும் திட்டங்களை அப்பிரதேசங்களில் உருவாக்கல், கொரோனா முடக்க நிலை காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து சொந்த மாவட்டங்களுக்கு மீளவும் திரும்ப முடியாதுள்ளவர்களை அவரவர் இடங்களுக்கு மீளவும் அனுப்ப விரைவான நடவடிக்கை மேற்கொள்ளல், நாட்டில் இருக்கக் கூடிய மீன்ரின் தொழிற்சாலைகளை மீள இயக்க நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுடன் நாட்டிலுள்ள நான்கு மீன்பிடி துறைமுகங்களைப் புனரமைப்பது தொடர்பிலும் பிரதமரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.




அத்துடன் ஒலுவில் துறைமுகத்தை துறைமுக அதிகார சபையிடமிருந்து பொறுப்பேற்று கடற்றொழிலாளர்களுக்கு பயன்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பிரதமரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது

பிரதமருடனான குறித்த சந்திப்பின்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ராலின், அமைச்சரின் ஆலோசகர் தவராசா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருடன் பிரதமரின் செயலாளர் மற்றும் துறைசார் செயலாளர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# உலகம் முழுவதும் கொரோனாவால் 2 இலட்சத்து 90ஆயிரம் பேர் மரணம்



(ஜெனிவா)

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 2 இலடசத்து 90 ஆயிரத்தைத் தாண்டியது.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவிய இந்த வைரஸ் பெரும் மனித இழப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரத்தைக் கடந்தது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி 43 இலட்சத்து 11 ஆயிரத்துக்கும் அதிகமானோ ருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கொரோனா பரவியவர்களில் 24 இலட்சத்து 54 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 46 ஆயிரத்து 585 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 16 இலட்சத்து 67 ஆயிரத்து 130இற்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். எனினும் இந்தக் கொடிய வைரஸ்"க்கு உலகம் முழுவதும் 2 இலட்சத்து 90 ஆயிரத்து 597 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# 3,700 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

முப்படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள 37 தனிமைப்படுத்தல் நிலையங்களில், 3,700 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனரென, கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்தது.

அத்துடன் இதுவரை 7,515 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

---

## 24 மணி நேரத்தில் 3525 பேர்

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு 74 ஆயிரத்தைத் தாண்டியது



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 74 ஆயிரத்தைத் தாண்டிய நிலையில், 2415 பேர் மரணமடைந்தனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம் பெறுகின்றன. கொரோனா பாதிப்பு குறைவாகவுள்ள பகுதிகளில் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 74 ஆயிரத்தைத் தாண்டியது.

மொத்தம் 74,281 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். இதேவேளை நேற்றுக் காலை 9 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 3525 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. 122 பேர் உயிரிழந்தனர்.

இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2415 ஆக உயர்ந்தது. இதுவரை 24 ஆயிரத்து 386 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. மகாராஷ்டிராவில் மொத்தம் 24 ஆயிரத்து 427 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அங்கு 921 பேர் பலியாகினர்.

குஜராத்தில் இதுவரை 8903 பேருக்கும், தமிழகத்தில் 8718 பேருக்கும், டில்லியில் 7639 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 3986 பேருக்கும், இராஜஸ்தானில் 4126 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 3664 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. (இ-7)

---

# இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் தளம்பல்

## மழை அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக எதிர்வரும் சில நாட்களில் நாடு முழுவதும் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணை க்களம் எதிர்வு கூறியது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்றுப் புதன்கிழமை வெளியிப் பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# திடீரென நிரம்பிய கோவில் கிணறு பார்வையிட மக்கள் படையெடுப்பு

## பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் குவிப்பு





(களுவாஞ்சிக்குடி)
மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சிக்கு மத்தியிலும், களுவாஞ்சிகுடி மாணிக்கப் பிள்ளையார் கோவில் கிணற்று நீர் நிரம்பி வழிந்தோடும் அதிசயத்தைப் பார்வையிட பெருமளவில் பொதுமக்கள், நேற்றுப் படையெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கேயுள்ள களுவாஞ்சிகுடி மாணிக்கப்பிள்ளையார் கோவில் வளாகத்திலுள்ள கிணற்றில், நேற்றுக் காலை 06 மணியளவில் நீர் நிறைந்து வழிந்துள்ளமையை பக்தர்கள் அவதானித்தனர். இந்தச் செய்தி, அப்பகுதியில் பரவியதைத் தொடர்ந்து அதனைப் பார்வையிடக் குவிந்த பொதுமக்களை விலக்க பொலிஸார் கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர். மேலும், விசேட அதிரடிப் படையினரும் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

கிணற்றின் அருகில்சென்று பார்வையிட்ட பொதுமக்கள், கடவுளின் அதிசயம் என நினைத்து, நிரம்பி வழிந்த கிணற்று நீரைப் பாத்திரம் கொண்டு அள்ளி எடுத்துச் சென்றனர். எனினும், நீர் கிணற்றின் உயர் மட்டம் வரை நிரம்பிக் காணப்படுகின்றது.

இதேவேளை, அப்பகுதியில் தொடர்ந்தும் பொதுமக்கள் ஒன்று கூடுவதை பொலிஸார் தடுத்து வருவதுடன், கிணற்று நீரை பகுப்பாய்வு செய்வதற்கு சுகாதாரத் துறையினர், நீரை எடுத்துச் சென்றனர். (இ-7)

# நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப பெருந்தோட்டத்துறை பங்களிக்க முடியும்

## ஜனாதிபதி கோட்டாபய சுட்டிக்காட்டு



(கொழும்பு)
இலக்குடன் செயற்பட்டால் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு விரிவானதொரு பங்களிப்பை வழங்கும் இயலுமை பெருந்தோட்டத்துறையிடம் உள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைக்குக் கொண்டு வந்து பொருளாதார செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பெருந்தோட்டத்துறை முக்கியமானதொரு துறை என்ற வகையில் அதற்கு எவ்வாறு தயாராக வேண்டும் என்பது குறித்து நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகின் அனைத்து நாடுகளும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளன. இறக்குமதியை மட்டுப்படுத்தி சவால்களை முகாமைத்துவம் செய்வதற்கு தனது அரசாங்கத்திற்கு முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பெருந்தோட்டத்துறையால் உற்பத்தி செய்யமுடியுமான பல விடயங்கள் அநாவசியமாக இறக்குமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

சுதேச பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் பெருந் தோட்டத் துறைக்கு முக்கியமானதொரு பொறுப்பு உள்ளது. அதனை விளங்கிக்கொண்டு நட்டத்தில் இயங்கும் தோட்டங்களை இலாப மீட்டும் நிலைக்கு விரைவாக முன்னேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் விரிவாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தினார்.

ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பயிர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். பெறுமதி சேர்த்தலின் அடிப்படையில் கறுவா, மிளகு உள்ளிட்ட முக்கிய பெருந்தோட்டப் பயிர்கள் மூலம் அதிக ஏற்றுமதி வருமானத்தை பெறுவதற்கு திட்டமிடுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (இ-7)

# அலைமோதிய மதுப்பிரியர்கள்





(யாழ்ப்பாணம்)
ஊரடங்கு தளர்த்தப்பட்ட மாவட்டங்களிலுள்ள மதுபான சாலைகளை திறப்பதற்கான அனுமதி நேற்று வழங்கப்பட்டது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்திலுள்ள மதுபானசாலைகளில் மதுப்பிரியர்கள் நேற்று அதிகளவில் ஒன்று கூடினர்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அச்சம் முற்றாக நீங்காத நிலையில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காது மதுப்பிரியர்கள் நீண்ட வரிசையில் கால் கடுக்க காத்திருந்தனர். (இ-8-30)

# ஒருநாள் சேவை ஒத்திவைப்பு

(கொழும்பு)
தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒருநாள் சேவை தொடர்ந்தும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்தது. கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் திணைக்களத்தின் பணிகளை ஆரம்பித்த போதிலும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடுவதால் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்தது.

தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒருநாள் சேவை கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. எனினும் பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள், சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுதல், கடவுச்சீட்டு விண்ணப்பம் ஆகிய தேவைகள் காரணமாக பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ஊடாக தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அத்திணைக்களம் மேலும் தெரிவித்தது. (இ)

# சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பதன் மூலமே கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்

## பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவுரை

(சாவகச்சேரி)
சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பதன் மூலமே கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என் சாவகச்சேரி நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தளிர்ராஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர் பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிகை அலங்கரிப்பு நிலையப் பணியாளர்கள் மற்றும் அழகு நிலைய ஊழியர்கள் வைத்தியர்களைப் போன்று தொழில் நிமித்தம் பலருடன் நெருங்கிப் பழகுபவர்கள்.

சிகை அலங்கரிப்புப் பணியாளரிடமிருந்து இன்னொரு நபருக்கோ அல்லது இன்னொரு நபரிடமிருந்து சிகை அலங்கரிப்பு நிலையப் பணியாளருக்கோ கொரோனாத் தொற்று ஏற்படக்கூடாது. அவ்வாறு தொற்று ஏற்பட்டால் அது பெரும் விபரீதமாகி விடும். காரணம் சிகை அலங்கரிப்பு நிலைய பணியாளர்கள் தினமும் பெருமளவானவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்கள். கொழும்பு பகுதியில் ஒரு சிகை அலங்கரிப்பு நிலையத்தில் இருந்து 29பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. எனவே சிகை அலங்கரிப்பு பணியாளர்கள் சமூகப் பொறுப்புடன் அவதானமாகச் செயற்பட வேண்டும். கொரோனா நோய் அபாயம் இன்றைக்கோ/நாளைக் கோ நீங்கிவிடும் எனச் சிந்திக்க வேண்டாம். இவ் அபாயம் சில மாத காலம் நீடிக்கக்கூடும். எனவே அதற்கு ஏற்றாற் போல் எமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இதுவரை கொரோனா தொடர்பில் நூறு சதவீதம் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை. மூக்கில் இருந்து சுவாசப்பை நோக்கி கொரோனா வைரஸ் பயணிக்கக் கூடியது.

மூக்கில் உள்ள திரவம் கொரோனா வைரஸ் உணர்கொம்புகளைக் கவரக் கூடியவை. பின்னர் வைரஸ் சுவாசப்பையில் இனப் பெருக்கமடைந்து வீரியமடைந்து சிறுநீரகம் மற்றும் மூளையை பாதிக்கும். எனவே வைரஸ் சுவாசப்பையை சென்றடைய விடாமல் இரப்பை ஊடாக வெளியேற்ற ஒரே வழி 10நிமிடங்களுக்கு ஒரு தடவை சுடுநீர் அருந்துவது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் 50வயதிற்கு மேற்பட்டவர்கள் அதிகளவில் மரணிக்கின்ற அதேவேளையில் 10-50 வயதிற்கு இடைப்பட்டவர்களிடம் தொற்று அதிகமாக ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# இராசிபலன்

14.05.2020
வைகாசி 01, வியாழக்கிழமை
சப்தமி முற்பகல் 11.04 மணிவரை
அட்டமி முற்பகல் 11.05 தொடக்கம்
திருவோணம் முற்பகல் 10.18 மணிவரை
சுபநேரம் 7.23-8.53 மணிவரை
இராகுகாலம் 1.23-2.53 மணிவரை
சந்திராஷ்டமம்- திருவாதிரை, புனர்பூசம்

வளவன்


மேஷம்

செய்தொழில் முன்னேற்றம் கருதி அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.


ரிஷபம்

குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறை வேறும் வாய்ப்புண்டு.


மிதுனம்

வீண் விரயங்கள் ஏற்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.


கடகம்

நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு.


சிம்மம்

சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தன்னம்பிக்கை யோடு பணிபுரிவீர்கள், காரிய அனுகூல முண்டு.


கன்னி

நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், வளர்ச்சி கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, செய் தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும்,கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.


மகரம்

தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணத்தால் பலனுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.


கும்பம்

சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், உறவினர்களின் நலன் கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

உழைப்பே அனைத்தையும் வெல்லும்

# இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு கொரோனா அச்சம் நீடிக்கலாம்

## அதுவரை தேர்தலை நடத்தாது காத்திருக்க முடியாது-திஸ்ஸ



(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்று அச்சம் இன்னும் இரண்டு ஆண்டுகள் வரை கூட நீடிக்கலாம். அதுவரை தேர்தலை நடத்தாது காத்திருக்க முடியாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கடந்த காலத்தில் அப்போதைய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இல்லாத காரணத்தால்தான் இருந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கான ஆணையாகவே கடந்த உள்ளூராட்சி தேர்தலிலும் ஜனாதிபதித்தேர்தலிலும் மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர் எனவும் திஸ்ஸ சுட்டிக் காட்டினார்.

எனவே தற்போது பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல இவ்வாறான வைரஸ் தொற்றுப் பரவல் நெருக்கடியில் கூட தென்கொரியாவில் தேர்தல் இடம்பெற்றது. இது அனைவருக்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாகும் எனவும் திஸ்ஸ சுட்டிக்காட்டினார். (இ-7)


### கொரோனாத் தொற்று தொடர்பில்

# கடற்படை எதையும் மறைக்கவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் கடற்படை தொடர்பான தகவல்களை சுகாதார அதிகாரிகளுக்கு வழங்குவதை இலங்கை கடற்படையினர் தவிர்த்து வருவதாக சில ஊடகங்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பாதுகாப்பு அமைச்சு முற்றாக மறுத்தது.



இலங்கைக் கடற்படைக்குள் கொரோனா வைரஸ் பரவுவது தொடர்பான உண்மை நிலைமையைக் கடற்படை மூடி மறைப்பதாக சில இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக் களை முற்றாக மறுப்பதாக பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரட்ன தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படை உள்ளிட்ட முப்படையினர் மத்தியில் ஏற்படும் கொரோனா வைரஸ் பாதிப்புக்கள் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படும் பரிசோதனை தொடர்பான தகவல்களை வழங்குவதில் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிப்பதாக அவர் தெரிவித்தார்.

கடற்படையினருடன் தொடர்பைப் பேணியோர்களைக் கண்டறியும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. இவர்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் என அடையாளம் காணப்படுபவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

எவ்வாறாயினும், வெலிசர கடற்படைத் தள வளாகத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளான முதலாம் நபர் அடையாளம் காணப்பட்டதிலிருந்து, பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் பபா பலிஹவதன, சுகாதார அமைச்சின் தொற்று நோய்களுக்கான வைத்திய நிபுணர் டாக்டர் திலங்க பத்திரண மற்றும் கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அதிகாரி ஆகியோரின் பரிந்துரைகளுக்கு அமைய வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இலங்கைக் கடற்படை மேற்கொண்டது.

இலங்கைக் கடற்படை, கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மருத்துவ ஆலோசனைகளைக் கோரிய அதே வேளை, அரசாங்கத்தால் பயிற்சியளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் க்டற்படைத் தளத்தில் தங்கியிருந்து பணிகளை முன்னெடுத்தும் வருகின்றனர்.

நாடளாவிய ரீதியில் கடற்படையினருக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் வைரஸ் தொற்றுக்குள்ளான மற்றும் தொற்றுக்குள்ளாகாத கடற்படையினர் தொடர்பான அனைத்துத்தகவல்களும் கொரோனா வைரஸ் தொடர்பிலான ஜனாதிபதி செயலணி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகள் மற்றும் இலங்கைப் பொலிஸ் ஆகியவற்றுக்கு இலங்கைக் கடற்படையினரால் சமர்ப்பிக்கப்படுகின்றன.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட கடற்படையினர் மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் பரிசோதனை செயன்முறை தொடர்பாக சுகாதார மற்றும் பொறுப்பான ஏனைய அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணித் தேவையான நடவடிக்கைகளை இலங்கைக் கடற்படை முன்னெடுத்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையானது ஒரு பொறுப்புவாய்ந்த அரச பாதுகாப்புத்துறை என்ற வகையில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் அரசாங்கப் பொறிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அந்த அடிப்படையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் மற்றும் பரிசோதிக்கப்படும் கடற்படையினர் தொடர்பிலான சகல தகவல்களையும் கொரோனா வைரஸ் ஒழிப்பு தொடர்பிலான ஜனாதிபதி செயலணி, பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகம், மாவட்ட பொதுச் சுகாதார சேவைகள் அலுவலகம் மற்றும் ஏனைய பொறுப்பான அரச அலுவலகங்கள் ஆகியவற்றுக்குச் சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

நாட்டில் வைரஸ் பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கைக் கடற்படையினர் முழுமையான ஒத்துழைப்புக் களை வழங்கி வருவதாக தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன, எனவே, இலங்கைக் கடற்படை, கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான எந்தத் தகவலையும் மறைக்காது எனவும் உறுதிப்படுத்தினார். (இ-7)

"முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற உயிரிழப்பை இனப்படுகொலை தினமான 'மே–18' அன்று தமிழ் இனப்படுகொலையின் ஒரு அடையாளமாக நினைவுகூரும் அதேசமயம் இனவழிப்பானது ஏனைய வடிவங்களில் தொடர்ந்தும் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்ற செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேச மக்களுக்கு இருக்கின்றது. எனவே இந்த இனவழிப்பு நாளில் எம் உறவுகளை நினைவுகூரும் அதேவேளை இந்நாளில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒன்றுகூடி இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டுமென வலியுறுத்துவோம்"

### முள்ளிவாய்க்கால்-தமிழின அழிப்பின் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல்

# மே - 18 ஆம் திகதி வரை

# இனப்படுகொலை வாரமாக அனுஷ்டிக்குக

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மகாவம்சம் எழுதப்பட்ட காலத்திலிருந்து இலங்கைத் தீவானது சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியதாகவும் இந்தத் தீவிலே பௌத்த மதத்தை மட்டுமே தூய்மையாக பாதுகாத்து வைத்திருக்க வேண்டுமென்ற தார்மீகப் பணியை தம்மிடம் வழங்கியுள்ளதாகக் கூறி சிங்கள பௌத்த பேரினவாதம் அதனை நிறைவேற்றுவதில் மிகவும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

தமிழர் இலங்கைத் தீவிலே தேச அந்தஸ்தோடு நடைமுறையில் வாழ்ந்து கொண்டிருப்பதானது சிங்கள பௌத்த தீவு என்ற தமது கனவுக்குத் தடையாக உள்ளதாகக் கருதி பிரித்தானியர் இலங்கைத்தீவை விட்டு வெளியேறிய காலத்திலிருந்து கடந்த 70 வருடங்களுக்கு மேலாக சிங்கள தேசத்தில் தலைமைத்துவத்துக்கு மாறிவந்த அனைத்துத் தரப்பினரும் தமிழ் இனவழிப்பையே செய்து வந்திருக்கின்றனர்.

'தமிழ்த்தேச' அந்தஸ்தை இல்லாமல் செய்யும் இலங்கை அரசின் அத்தகைய முயற்சியையே தமிழ் மக்கள் இனப்பிரச்சினையாக அடையாளப்படுத்துகின்றார்கள்.

'தமிழ்த்தேச' அங்கீகாரம் பெறுவதற்காக களத்திலே போராடிக்கொண்டிருந்த எங்கள் விடுதலைப் போராளிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு பெருமளவிலான தமிழ் மக்களின் உயிர்களையும் சேர்த்து முள்ளிவாய்க்காலில் மனிதப் படுகொலைகள் மூலம் அழித்தனர்.

இது இலங்கை அரசு இது வரை காலமும் மேற்கொண்ட இனவழிப்பின் உச்ச அடையாளமாகும்.

தமிழ் இனவழிப்பு முள்ளிவாய்க்காலுடன் முடிவுக்கு வரவில்லை. மாறாக 'தமிழ்த்தேச' அந்தஸ்தை வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் இல்லாமல் அழிப்பதற்காக கடந்த 2009 இற்குப் பின்னரான 11 ஆண்டுகளில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த இலங்கையின் அனைத்து ஆளும் தரப்புக்களுமே செயற்பட்டு வந்திருக்கின்றன.

இன்று அதனுடைய வெளிப்பாடாகவே பௌத்த மயமாக்கல், சிங்கள மயமாக்கல், காணி அபகரிப்பு, கலாசார அழிப்பு, பொருளாதார அழிப்பு, போதைப் பொருள் திணிப்பு போன்ற செயற்பாடுகள் தீவிரம் பெற்று வருகின்றன.

அந்தவகையில் 13.05.2020 தொடக்கம் 18.05.2020 வரை இனப்படுகொலை வாரமாக அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுகின்றோம். இவ்வார காலத்தில் தமிழ்த்தேசத்தில் இடம்பெற்ற படுகொலைகளை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம். இறுதி நாளான 18.05.2020 அன்று முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தக் கூடியவர்களை அங்கு சென்று நினைவுகூரலில் கலந்துகொள்ளுமாறும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்) கட்சியினராகிய நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

புலம்பெயர்ந்து உலகம் பூராகவும் வாழும் தமிழ் மக்களையும் தமிழக உறவுகளையும் இந்த நினைவேந்தலை தங்கள் நாடுகளில் மேற்கொள்வதன் மூலம் இனப்படுகொலைக்கு நீதிகோரும் போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறும் கோருகின்றோம்.

கொரோனா நெருக்கடியான இக்காலப்பகுதியில் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான சுகாதாரத்துறையினரின் அனைத்து ஆலோசனைகளையும் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் இணைந்து விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## யாழில் 65 பேரிடம் பரிசோதனைகள் எவருக்கும் கொரோனாத்தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 65 பேரிடம் கொரோனாத் தொற்றுக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், அவர்களில் எவருக்கும் தொற்றில்லையென உறுதிப்படுத்தப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அந்தவகையில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 24 பேர், பூவரசங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கியிருந்த 30 பேர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட 3 பேர், யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 2 பேர், காங்கேசன்துறை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 3 பேர், முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட ஒருவர், புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)




## 34 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

மறைந்த ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் போராளிகள், பொதுமக்களின் 34 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி அண்மையில் கோப்பாய் அன்னை திரேசா கன்னியர் மடத்தின் அருட்சகோதரிகளால் நடத்தப்படும் முதியோர் இல்லத்தில் சிறீ சபாரத்தினம் அறக்கட்டளையினரால் மதிய போசனம் வழங்கப்பட்டது.

அத்தோடு மறைந்த தலைவர், போராளிகள், பொதுமக்களை நினைவுகூர்ந்து விசேட வழிபாடும் அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் தென்மராட்சி அமைப்பாளர் சூடாமணி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-4-30)

## சிகையலங்கரிப்பு நிலையங்கள் மீளத்திறப்பு



(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையங்கள் நேற்று மீள இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்நிலையங்கள் சுகாதாரத் துறையினரின் அறிவுரைகளுக்கு அமைவாக சேவைகளை ஆரம்பித்துள்ளன.

அதேவேளை வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.(இ-5-60)

# நிவாரணப் பணிகளுக்குப் பதிலாக முற்றுமுழுதாக பிரசார நடவடிக்கை

## அரசு மீது அநுர சாடல்



**(கொழும்பு)**

**தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டால் நிவாரணப் பணிகளுக்கு பதிலாக முற்று முழுதாக தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மட்டுமே முன்னெடுக்கப்படும் என தேசிய மக்கள்சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸ் தொற்றுநோய் குறித்து சுகாதார அதிகாரிகள் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். மக்கள் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற காரணிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டே வருகின்றன.

பொது நிர்வாகமும் முடக்கப்பட்டேயுள்ளது. ஆகவே தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான எந்தவொரு சூழலும் இல்லாத இந்த நிலையில் விருப்பு எண் வழங்கினால் அதனை எப்படி மக்களுக்குப் பிரசாரம் செய்வது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை அரச தரப்பினர் முன்னெடுப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இப்போது விருப்பு எண் வழங்கப்பட்டால் நிவாரணப் பணிகளுக்குப் பதிலாக முற்று முழுதாக தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மட்டுமே முன்னெடுக்கப்படும்.

இதனால் அரசாங்கம் மாத்திரமே பிரசார செயற்பாடுகளில் ஈடுபடும். எதிரணிக்கு நியாயமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இப்போதே பசில் ராஜபக்ஷ தலைமையில் அந்தப்பணி ஆரம்பித்துவிட்டது. ஆகவே இப்போது தேர்தல் நடத்தப்படுமென்றால் தேர்தல் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

அதனை முன்னெடுக்க நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதனைக் கவனத்தில் கொண்டு தேர்தலை நடத்த முன்வருதல் வேண்டும். எனவே தேர்தல்கள் ஆணைக்குழு இந்த விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (இ-7)

# கியூபாவிற்கு இலங்கை பாராட்டு

(கொழும்பு)

ஹெய்ட்டியில் பணிபுரியும் இலங்கையர்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கியூபாவின் மருத்துவக் குழுவொன்றை ஹெய்ட்டி குடியரசிற்கு அனுப்பிய தன் மூலமாக வழங்கப்பட்ட ஆதரவுகளுக்காக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது பாராட்டுகளை கியூபா அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்.

இலங்கைக்கான கியூபா தூதுவர் ஜுவானா எலெனா ராமோஸ் ரொட்ரிகஸுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளிநாட்டு உறவுகள் அமைச்சில் இடம் பெற்ற சந்திப்பின் போது வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் இவ்வாறு பாராட்டுக்களைத் தெரிவித்தார். ஹெய்ட்டியிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஆடைத்துறை ஊழியர்களுக்கு ஆதரவளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் விடுக்கப்பட்ட வெளிப்படையான வேண்டுகோளின் பேரில் ஐந்து பேர் கொண்ட மருத்துவக்குழு கியூபா அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த 7 ஆம் திகதி ஹெய்ட்டியை சென்றடைந்த குறித்த மருத்துவக் குழு, கொவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கான சிறந்த நடைமுறைகள், வழக்கமான சுகாதாரப் பரிசோதனைகள் மற்றும் தேவைப்படுபவர்களுக்கான முதன்மையான பராமரிப்பு போன்றவை குறித்து இலங்கை ஊழிய ர்களுக்கு அறிவுறுத்தியது

இதுதொடர்பாக, அமைச்சர் குணவர்த்தன கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் புருனோ ரொட்ரிகஸ் பர்ரில்லாவுக்கு இலங்கைக்கான கியூபா தூதுவர் மூலமாக மீண்டுமொருமுறை தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் கியூபாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொவிட்-19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான மருத்துவப் பொருட்களை கியூபா அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதில் இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் உதவி மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான எதிர்கால உத்திகள் குறித்தும் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் கலந்துரையாடினார்.

நாட்டில் நடைமுறையிலுள்ள பயனுள்ள சுகாதார முறைமைகளைப் பயன்படுத்தி சரியான நேரத்தில் மற்றும் மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் மூலமாக செயற்படுத்தப்பட்ட வெற்றிகரமான கொவிட்-19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக தூதுவர் ரொட்ரிகஸ் இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டினார்.

கியூபா மற்றும் கரிபியன் பிராந்தியத்தின் முன்னேற்றங்கள் கரிபியன் சமூகத்தின் நடவடிக்கைகள் மற்றும் கியூபா, ஐரோப்பா மற்றும் ஆசியப் பிராந்தியங்களுக்கிடையிலான இணைப்பு குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களை கியூபா தூதுவர் வெளிநாட்டு உறவுகள் அமைச்சருக்கு வழங்கினார். சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து இருதரப்பு மற்றும் பல்தரப்புத் துறைகளில் இலங்கைக்கும் கியூபாவிற்குமிடையில் தற்போதுள்ள ஒத்துழைப்பு குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. (இ-5-7)

# கொழும்பில் நேற்று விசேட சோதனை



(கொழும்பு)

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுகிறார்களா என்பதை அவதானிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனைக்கு அமைவாக குறித்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக சுமார் 20 நடமாடும் பொலிஸ் வாகனங்களும் 100 சிற்றூர்திகளும் 300 பொலிஸ் அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மேலதிகமாக இந்த நடவடிக்கையை நாடு முழுவதும் விஸ்தரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

# மருந்துப் பொருட்களின் 4ஆவது தொகுதியை இந்தியா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியது



(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேக்கப் அத்தியாவசியமான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களின் நான்காவது தொகுதியை வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் வெளிவிவகார செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோரிடம் வெளிநாட்டு உறவுகள் அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் கையளித்தார்.

கடந்த 8 ஆம் திகதி சிறப்பு இந்திய விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட சுமார் 12.5 தொன் மருந்துகள் மற் றும் உபகரணங்கள் உள்ளடங்கிய இந்தப் பொருட்களின் தொகுதியானது, கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராகப் போராடும் அண்டை மற்றும் பங்காண்மை நாடுகளுக்கு உதவுவதற்கான பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சியைக் குறித்து நிற்கிறது.

இந்தப் பொருட்கள் கையளிக்கும் நிகழ்வைத் தொடர்ந்து, அரசியல், வர்த்தகம், சுற்றுலா, சுகாதாரம் மற்றும் பிராந்திய விவகாரங்கள் போன்றவற்றிலான இருதரப்பு ஒத்துழைப்பை மீளாய்வு செய்வதற்கான தொரு சுருக்கமான சந்திப்பிற்கு பிரதி உயர்ஸ்தானிகர் வெளிநாட்டு உறவுகள் அமைச்சரை அழைத்தார்.

பொதுவான சவால்களுக்கு முகம் கொடுக்கும் தற்போதைய காலகட்டத்தில், மருத்துவப் பொருட்கள் உள்ளிட்ட முக்கியமான வளங்களை நன்கொடைகளாகப் பகிர்ந்து கொள்வதிலான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவை வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் பாராட்டினார். தேசிய ரீதியாக நாடு முடக்கப்பட்டிருந்த நிலையிலும், இலங்கைப் பிரஜைகளை இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்புவது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விரைவான நடவடிக்கைகளுக்காக அமைச்சர் குணவர்த்தன இந்திய அரசாங்கத்திற்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார். (இ-5-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 173cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த, காணி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10727

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த, வெளிநாட்டில் வேலை பார்க்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10728

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா: 33 ¾ செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: மென் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/10730

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 20 ½ செவ் 7 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: B.Sc (Hons) in Nursing, தாதியியல்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/10732

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: சூரி, செவ் 12 இல்
உயரம்: 149cm
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த
எதிர்பார்ப்பு: பொருத்தமான மணமகன். மணமகள் கணவனை இழந்தவர். பிள்ளைகள் இல்லை. எனவே விவாகரத்தானவர், ஒரு பிள்ளை உள்ளவர் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/10757

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 52 ½ செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bachelor of Accounting & Finance, Accountant
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன், தகுந்த வரன்
தொ.இ: G/10758

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 47¾ செவ் 3 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த
எதிர்பார்ப்பு: பொருத்தமான வரன்
தொ.இ: G/10766

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த தையல்
எதிர்பார்ப்பு: சாதாரண மாப்பிள்ளை
தொ.இ: G/10767

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

### கிராம உத்தியோகத்தர் உட்பட

# திணைக்கள அதிகாரிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அவசியம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி அதிகாரி மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரி ஆகியோரது பாதுகாப்புக்கு பொலிஸ் அதிகாரி ஒருவரை சேவையில் ஈடுபடுத்தப்படுவது சிறந்தது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கிராம உத்தியோகத்தர் சங்கம் மற்றும் தொழிற் தரப்பினர் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர். இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போது கிராம உத்தியோகத்தர் மற்றும் அரச அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

சேவையில் ஈடுபடும் போது



அரச அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயவும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும் பொலிஸ் அதிகாரி ஒருவரை சேவையில் ஈடுப்படுத்துவது சிறந்தது .

அத்துடன் பாதுகாப்பு முகக்கவசம் உட்பட இதர பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற் கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பிரதமர் உறுதியளித்தார். (இ-7)

## வெள்ளை வான் ஊடக சந்திப்பு; ராஜிதவின் பிணை இரத்து!

(கொழும்பு)

வெள்ளை வான் ஊடகச் சந்திப்பு தொடர்பாக ராஜித சேனாரட்னவிற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை உத்தரவு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளை வான் ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் ராஜித கடந்த டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டபோதும் உடல்நலக் குறைவு காரணமாக தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இதனை அடுத்து கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி ராஜித சேனாரட்னவை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப்பிணையில் செல்ல கொழும்பு தலைமை நீதவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டிருந்தார்.

இருப்பினும், பிணை வழங்கிய நீதவான் நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து சட்டமா அதிபர்



கடந்த ஜனவரி 08 ஆம் திகதி திருத்த விண்ணப்பத்தை தாக்கல் செய்தார்.

இந்நிலையில் குறித்த திருத்த விண்ணப்பம் நேற்று புதன் கிழமை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை உத்தரவு இரத்துச் செய்யப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படவுள்ளார் என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது. (இ-7)

# கொரோனா தாண்டவமாடும் தருணத்தில் தாதிமாரின் தன்னலம் மறந்த சேவையைத் தரணி போற்ற வேண்டும்

சர்வதேச ரீதியில் ஆண்டுதோறும் மே 12 ஆம் திகதி சர்வதேச தாதியர்-செவிலியர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. சமூகத்திற்கு தாதியர் அர்ப்பணிப்போடு ஆற்றும் பணிகளையும் தியாகச் சேவையின் சிறப்புக்களையும் சிறப்பாக நினைவுகூருவதற்கு என இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செவிலியர் அமைப்பு (International Council of Nurses) இத்தினத்தை 1965 ஆம் ஆண்டிலிருந்து நினைவுகூருகிறது. 1953 இல் ஐக்கிய அமெரிக்காவின் அரச சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான டொரத்தி சதர்லாண்ட் (Dorothy Sutherland) என்பவர் இத்தினத்தை செவிலியர் தினமாக அறிவிக்க வேண்டுமெனவிடுத்த அழைப்பை அப்போதைய ஜனாதிபதி ஐசன்ஹோவர் நிராகரித்துள்ளார். இருப்பினும் 1965 ஆம் ஆண்டிலிருந்து நவீனதாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேளின் பிறந்ததினமான மே 12 ஆம் நாள் சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12 ஆம் நாளில் லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் (Westminster Abbey) சம்பிரதாயபூர்வமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. இங்குள்ள தாதிகள் மூலம் மாளிகையில் உள் ளவிளக்கு ஏற்றப்பட்டு அங்கு வருகைதரும் செவிலியர்கள் ஒவ்வொருவராலும் கைமாறப்பட்டு பின்னர் அது அங்குள்ள உயர் பீடத்தில் வைக்கப்படும். இது ஒரு செவிலியரில் இருந்து மற்றொருவருக்கு தமது அறிவைப் பரிமாறப்படுவதைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. அதேநேரம், 1974 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் மே 9 முதல் மே 15 வரை செவிலியர் வாரம் கொண்டாடப்படுகிறது. ஓர் வைத்தியசாலைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் அர்ப்பணிப்பாளர்கள் தாதிமார்கள் தான் என்றால் அகில அரங்கில் அது அங்கீகரிக்கப்படும்உண்மையாகும்.

மனித வர்க்கத்திற்கு இன்று அதுவும் கொரோனா தாண்டவமாடும் தருணத்தில் தாதிமாரின் தன்னலம் மறந்த சேவையை தாராள குணத்துடன் தரணி போற்ற வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. மதிப்பிட்டுவிடமுடியா அவர்களது சேவைக்கு உள்ளத்தின் ஆளத்திலிருந்து நன்றிகள்



சர்வதேச தாதியர் தினத்தையொட்டி (12.05.2020) இக்கட்டுரை பிரசுரமாகிறது.

பல காணிக்கையாக்க வேண்டும்.

பொறுப்புள்ள முறையில் பண்பாகப் பேசி பக்குவமாக செயற்பட்டு மனித எச்சங்களைக்கூட அச்சமின்றி மிச்சங்கள் இல்லாது அகற்றி உணர்வோடு உரசித் தாதியர்கள் தரும் சேவைகள் கட்டாயம் மெச்சிக்கப்பட வேண்டியவை. 'தாதியர்தினம்" என்று வரும்போது நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதியான புளோரன்ஸ் நைட்டிங்கேளை மறந்துவிட முடியாது.

ஒரு கிறிஸ்தவரான இவர் தனக்கு "இறைவனால் விதிக்கப்பட்ட பணியாகவே" தாதியர் சேவையை உணர்ந்து மேற்கொண்டார். தாதித்தொழிலின் புனிதத்துவத்தை உணர்த்திய இவர் தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் முதலில் ஆரம்பித்தார். விளக்கேந்திய சீமாட்டி, கை விளக்கேந்திய காரிகை (The Lady with the Lamp) என்று அனைவராலும் போற்றப்பட்ட இவர் ஒரு எழுத்தாளரும் புள்ளி விபரவியலாளரும் ஆவார். பிரித்தானியாவில் செல்வச் செழிப்பு மிக்க உயர்குடிக் குடும்பமொன்றைச் சேர்ந்த இவர், இத்தாலி, புளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத் தழுவி இவருக்குப் பெயரிட்டார்கள்.

அவருக்கு1837ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்த உணர்வு அவரது வாழ்நாள் முழுதும் நீடித்தது. பெற்றோரின் எதிர்ப்புக்கும் மத்தியில் தாதியர் சேவையில் ஈடுபட வேண்டும் என்னும் தனது முடிவை புளோரன்ஸ் 1845 ஆம் ஆண்டு அறிவித்தார். இதையடுத்து தன் வாழ்நாளையே தாதிச் சேவையில் அர்ப்பணித்தார்.

தாதியர் பணியில் 25 வகையான நிலைகள் உள்ளன என அறிய முடிகிறது. ஒவ்வொரு நிலைக்கும் வெவ்வேறு விதமான பட்டப்படிப்பு தகைமைகள் அவசிய மாகிறது. இதில் கலாநிதிப் பட்டமே அதி உயர் நிலையாகும். இதனைக் கற்பதற்கு முதலில் இளநிலை பட்டம். அதனைத் தொடர்ந்து முது நிலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் "வைத்திய தாதியர்கள்" "Doctor Nurse" என்ற நிலையைஅடைகின்றனர்.

சேவைக்கே அடையாளமாக வெள்ளைச் சீருடை அணிந்து தாதியர்கள் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் இரு கண்களாகக் கொண்டு செய்யும் தியாகப்பணி பாரெங்கும் பாராட்டப்பட வேண்டியதே. உலகின் சுகாதாரப்பணியாளர்களில் 50 வீதமானோர் தாதியர்கள் மற்றும் மருத்துவ பணிப் பெண்கள் என கூறப்படுகின்றது. தற்போது உலக அளவில் தாதியர்கள் எண்ணிக்கை குறைவடைந்து வந்து கொண்டிருக்கின்றது என்பதும் கவலை தருகின்ற ஒரு விடயமாகும்.

அன்னைக்கு-பாரியாருக்கு அடுத்தபடியாக பாரினில் அன்பாகவும் அரவணைப்பாகவும் அருவருப்பின்றியும் நம்மைப் பார்த்துக் கொள்ளும் ஒரு ஜீவன் என்றால் அது தாதியராகத்தானே இருக்க முடியும். சுகாதாரச் சேவையை முன்னெடுத்துச் செல்வதிலும் நோயைத்தடுப்பதிலும் சமுதாய பராமரிப்பிலும் தாதியர்கள் முக்கிய பங்குபுரிகின்றார்கள்.

**இலங்கையில் தாதியர் தினம்**

ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு கருப்பொருளின் கீழ் இலங்கையில் அரசாங்க சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தினால் சர்வதேச தாதியர்தின விழா ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்று வருகின்றமை மனம் சலிக்காது சேவை வழங்கலுக்கு சான்றாகும். தாதியர் இன்னொரு தாய் என்றால் மிகையாகாது. இவ்வாறு உலகெங்கிலும் சேவை புரியும் தாதியர்களின் மகத்தான பணிகளைக் கண்ணியப்படுத்தி கௌரவிப்பது அவர்களுக்கு வழங்கும் அதியுயர் அங்கீகாரமாகும்.



**ம.பிரான்சிஸ்கீ**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்-**
**தொடர்பாடல்-ஊடகவியற்கற்கை ஆசிரியர்-**
**யா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

மருத்துவர்களின் வலது கரமாகவும் நோயாளர்களுக்கு அன்பானவராகவும் அணுகப்படும் தாதியர் உயர்வாகவே கருதப்படுகின்றனர். தற்போது.பல்வேறு பணி வகிபாகங்களின் சுமைகளுக்கும் சவால்களுக்கும் இடையே சோர்ந்து சரிந்து போகாது தாதியர்கள் தங்களின் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். அர்ப்பணிப்பின் அர்த்தத்தை அனைவருக்கும் விளக்கும் சின்னமாக தாதியர்கள் கருதப்படுகின்றனர்.

"தாதியர் என்பது மாறுதலுக்கான சக்தி- சுகாதாரத்திற்கான முக்கிய வளம்" என்பதை உணர்வோம். 'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது" எனும் குறளிற்கிணங்க தாதியர்கள் உணர்வோடு ஒன்றி ஆற்றும் சேவை அளப்பெரியது. தாதியர் சேவையை மேம்படுத்துவதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் எனஅகில இலங்கை தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் ஒருமுறை விடுத்த கோரிக்கை சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம்.

# இலங்கையில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்திற்கு மன்னிப்பு கேட்ட பேஸ்புக்

(கொழும்பு)

கடந்த 2018 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்திற்கு முகப்புத்தகத்தில் (பேஸ்புக்) பதிவிடப்பட்ட சில வன்முறை சார்ந்த கருத்துக்களும் துஷ்பிரயோக பதிவுகளும் காரணமாக இருந்திருக்கலாம் என சமூக வல்லப்பின்னலின் செயற்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

இலங்கை, இந்தோனேசியா மற்றும் கம்போடியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்த சுயாதீன மதிப்பீட்டு அறிக்கையை நேற்று முன்தினம் அந்த அமைப்பு வெளியிட்டது.

அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. உண்மையான மனித உரிமை விடயங்கள் தொடர்பான விடயங்களை அங்கீகரித்து மன்னிப்பு கோருகிறோம் எனவும் அந்த அமைப்பு தெரிவித்தது.

உள்ளூர் மொழித் திறன்களுடன் உள்ளடக்க மதிப்பீட்டாளர்களை கடமைகளில் ஈடுபடுத்தல், வெறுக்கத்தக்க பேச்சை தானாகவே கண்டறிந்து தவறான உள்ளடக்கத்தை பரப்புவதைத் தடுக்கும் தொழில்நுட்பத்தை செயற்படுத்துதல் உள்ளிட்ட நடைமுறைகளை எடுக்குமாறு பேஸ்புக் நிறுவனம் எடுத்துரைத்தது.

உள்ளடக்க அளவீடு மற்றும் தவறான செய்திகளின் பரவலை தடுப்பது குறித்து குழுவின் கடமையாக அமைய வேண்டும் எனவும் அந்தக் குழு மேலும் தெரிவித்தது. (இ-7)

# மதுபானசாலைகளைத் திறக்க அனுமதி

(கொழும்பு)

ஊரடங்கு தளர்த்தப்பட்ட மாவட்டங்களில் மதுபான சாலைகளை நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 11 மணிமுதல் திறக்க மதுவரித் திணைக்களம் அனுமதியளித்தது.

அதன்படி கொழும்பு, கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நேற்று முதல் மதுபானசாலைகள் திறக்கப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள பல்பொருள் அங்காடிகளில் மட்டும் மதுபானசாலைகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டதாக அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (இ-7)

## சந்தையில் தேங்கி நிற்கும்

# வெள்ளம் வழிந்தோட வழியேற்படுத்துங்கள்



(கரணவாய்)

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நெல்லியடிப் பொதுச் சந்தைப் பகுதியில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனால் சந்தைக்குச் செல்வோரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

எனவே இப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் வழிந்தோட உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-5-60)

# குண்டுத் தாக்குதல்கள் குறித்து இரு சிறுவர்கள் சாட்சியம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் நேற்று முன்தினம் இரு சிறுவர்கள் கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குறித்த இரு சிறுவர்களும் விசேட சாட்சியாளர்களாக அங்கு விசாரணையாளர்களால் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் இரகசிய வாக்கு மூலம் நீதவானின் உத்தியோகபூர்வ அறையில் வைத்து பெறப்பட்டது.


இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட, புத்தளம் - வனாத்தவில்லு, காரைதீவு பகுதியின் மத்ரஸாவில் அடிப்படைவாதம் போதிக்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை மையப்படுத்தியே குறித்த சாட்சியாளர்களான இரு சிறுவர்களும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிக நேரம் அவர்கள் நீதவான் முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

இந்நிலையில் தற்போது, உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலகள் குறித்த விசாரணைகளை 12 சி.ஐ.டி., சி.ரி.ஐ.டி. குழுக்கள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவான் வெதிசிங்கவின் கீழ் முன்னெடுத்து வருவதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2035 facebook

**கபிலா**



இப்படி பாத்ரும்ல சம்போ போடும்போது விதவிதமா ஹேர்ஸ்டைல் செய்து ரசிப்போம் இப்படி அனுபவம் உங்களுக்கு இருக்கா?

**மாறன்**



முகமூடி அணியாமல் மற்றவர் அன்பைப் பெற்றுப்பார், ஒருநாள் சந்தோசம் உனக்குப் பெரிதாகத் தெரியாது

**வெற்றி**



சைக்கிளில் நண்பனின் கையைப் பிடித்தபடி அவன் மிதிக்கும் விசையிலேயே ஒய்யாரமாகச் சுத்துவோம். அந்தக் காலம் திரும்ப வரமாட்டுதோ என்று மனசு ஏங்கும்

**விஷ்ணு**



எவ்வளவு தைரியமான, முரடான, திமிரான ஆணும் அவனுக்கு பிடிச்ச பொண்ணோட கண்ணுக்கு முன்னாடி அடங்கித்தான் போகிறார்கள்

**ராஜேஷ்**



பாறாங்கல் அறியவில்லை தன்னைச் சுமப்பது பூ என்று

**சுமிதா**



இது வயதின் எண்ணிக்கையில் வந்த சுருக்கம் இல்லை. எத்தனை அனுபவம் என்று கடவுள் அளித்த எண்ணிக்கையின் கோடுகள் முதுமை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உப்புக்கஞ்சியை நினைவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

யுத்தம் முடிவுற்று பல ஆண்டுகள் கடந்து போனாலும் யுத்தம் தந்த வடுக்களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. இவ் யுத்தகால நினைவுகளில் மறக்க முடியாத ஒன்றாக விளங்குவது தான் உப்புக் கஞ்சி...!! யுத்த காலங்களில் எமது உயிரை தக்க வைத்துக் கொண்ட முதன்மையான உணவாதாரமாக உப்புக் கஞ்சியே தனியிடம் பிடித்தது.

பல இலட்சம் மக்கள் கஞ்சி உணவுக்காக காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய வரலாறுகளும் உண்டு. இக் கஞ்சி உணவு அன்றைய நாட்களில் மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது. முள்ளிவாய்க்காலில் உணவுக்காக பட்ட அவலத்தையும் கஞ்சி உணவே உயிரைத் தக்க வைத்தது என்பதை வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர் கால சந்ததியினருக்கும் இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் நினைவேந்தல்நாட்களில்கஞ்சி உணவை அங்கு வரும் மக்களுக்கு வழங்குவது வழமையாகும்.

கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்நிலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுபடுத்தும் முகமாக தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தினரால் முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்து பச்சையரிசி, உப்பு அடங்கிய கஞ்சிக்கான சிறு பைகளை வழங்கும்வேலைத் திட்டம் நேற்று முன்தினம் உணர்வு பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமல்லாது கிளிநொச்சி, வவுனியா முதலிய மாவட்டங்களிலும் ஆயிரம் பொதுமக்களுக்கான கஞ்சி உணவுப் பொதிகளை வழங்கும் செயற்றிட்டம் சமநேரத்தில் முன்னெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஓரிரு நாட்களில் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை முதலிய மாவட்டங்களுக்கும் இக்கஞ்சி உணவுக்கான பொதிகள் தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தினரால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4-9-281)






முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாட்டு நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மக்கள் பங்குபற்றல் இன்றி அமைதியான முறையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இரணைப்பாலை பங்குத்தந்தையால் அன்னையின் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

(படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மட்டுப்படுத்தப்பட்ட பேருந்து சேவை நடைமுறை

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்ட அரச பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பேருந்து சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேலும் தனியார் பேருந்து சேவைகள் எதுவும் நேற்றைய தினம் இடம்பெறவில்லை.

பேருந்துகளில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறைகளில் வேலை செய்பவர்களும் மருந்து தேவையுடையவர்களுமே பேருந்துகளில் பயணங்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# குழாய் மூலம் நெற்செய்கைக்கு நீர்





(குருமன்காடு)

ஜப்பான் நாட்டை பின்பற்றி இலங்கையில் குழாய் மூலம் நெற்செய்கைக்கு நீர் வழங்கும் திட்டம் முதன் முதலாக வவுனியாவில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு வவுனியா, சாம்பல்தோட்டம் குளப் பகுதியில் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சாம்பல் தோட்டம் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின் கமநல அபிவிருத்தித்திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யூ.எம்.எம்.பீ.வீரசேகர மற்றும் மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல சேன ஆகியோர் இணைந்து இத் திட்டத்தை பார்வையிட்டு ஆரம்பித்து வைத்தனர்.

ஜப்பான் நாட்டில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி சிறப்பான நீர் முகாமைத்துவத்தின் கீழ் விவசாயச் செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இம் முறையைப் பின்பற்றி இலங்கையில் முதன் முதலாக வவுனியா சாம்பல்தோட்டம் குளத்தில் இருந்து குழாய் வழியாக விவசாய நடவடிக்கைளுக்கு நீர் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 48 மில்லியன் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் செயற்றிட்டம் மூலம் 75 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த திட்டமானது வவுனியா மாவட்டத்தின் கோவில்குளம், வவுனியா வடக்கு நாகர்குளம் ஆகிய இடங்களிலும் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது. (ஜ-4-250)

# மதுப்பிரியர்களால் நிறைந்த மதுபான நிலையங்கள்



(நெளுக்குளம்)

வவுனியாவில் அமைந்துள்ள மதுபான நிலையங்கள் நேற்றையதினம் மதுப்பிரியர்களால் நிறைந்து காணப்பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு கடந்த இரண்டு மாதங்களிற்கும் மேலாக நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த திங்கட்கிழமை 23 மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட மாவட்டங்களில் நேற்றையதினம் மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியது. நீண்ட நாட்களின் பின்னர் மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டதால் வவுனியாவில் உள்ள மதுபானசாலைகளிற்கு முன்பாக குடிமகன்கள் அதிகமாக ஒன்றுகூடியிருந்தனர்.

இதேவேளை சில மதுபான நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்து மதுபானத்தை கொள்வனவு செய்ததுடன் ஒவ்வொருவருக்கிடையில் சமூக இடைவெளியும் பேணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-299)

# வாழ்வாதார உதவி வழங்குமாறு

## அழகுக்கலை நிபுணர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அழகுக்கலை நிலையங்களை நிர்வகிக்கும் பெண்கள் சிலர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதனை சந்தித்து தங்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

குறிப்பாக நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் ஏற்பட்டதன் பின்னணியில் இதுவரை காலமும் அழகுக்கலை நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் தற்போது அவை கடுமையான நிபந்தனைகளுக்கு மத்தியில் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அழகுக்கலை நிலையத்தில் செய்யக்கூடிய சேவைகளில் அனுமதிக்கப்பட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளவர்கள் வருகை தருவதில்லை.



குறித்த சேவைகளைப் பெறுவதற்கு வருடத்தில் ஒரு சிலரே அவ்வாறான தேவைகளுக்காக வருகை தருவதாகவும் அந்தத் தொழிலை செய்வதனூடாக தங்களுக்கு எந்தவிதமான வாழ்வாதார நன்மைகளும் கிடைக்காது எனவும் குறிப்பாக தற்போது அனுமதிக்கப்பட்ட தொழில்களை செய்வதற்காக கடைகளைத் திறப்பதனூடாக எந்தவித பிரயோசனமும் இல்லாத நிலையில் ஏனைய அனைத்துத் தொழில்களும் செய்யக்கூடிய அனுமதி கிடைக்கும் வரை தங்களுடைய கடைகளை மூடி வைத்து இருப்பதாகவும் அது வரையான காலப்பகுதியில் இந்தத் தொழிலை நம்பி வாழ்கின்ற தங்களுக்கு வாழ்வாதார உதவிகளை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரச அதிபரிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். (ஜ-4-281)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

16

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



நியாயமானதும் வெளிப்படையானதுமான பொறிமுறையாக இருந்தால் இந்த பதவிகளுக்காக பெயர்களை தெரிவுசெய்து உங்களிடம் அனுப்பிவைக்கும் ஜனாதிபதிக்கு நிராகரிப்பிற்கான காரணத்தை தெரிந்து கொள்ள முடியாதா? நீங்களோ பிரதம நீதியரசரோ எனக்கு அவ்வாறான எந்த விளக்கத்தையும் இதுவரை அனுப்பி வைக்கவில்லை. நிராகரிக்கப்பட்ட 14 பேரும் இந்த நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை என்பதையே தெரிவிக்கின்றார்கள்.

19 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக சட்டத்தின் ஆதிக்கத்தை வலுப்படுத்தி அரசியலமைப்பிற்கு இணங்க அரச நிர்வாகத்தை மேற்கொள்ளவே எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக அந்த திருத்தத்துடன், இணைக்கப்பட்ட முக்கியமான விடயம் என்னவென்றால் அரசியலமைப்பு சபையை நிறுவுவதாகும். 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அரசியலமைப்பு சபையை அரசியல் மயமாக்கி, அது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களுக்கு கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாக 2015 தேர்தல் சமயத்தில் ஒரு கருத்து நிலவியது.

அது ஜனநாயக விரோத, வெளிப்படைத்தன்மையற்ற முடிவுகளை எடுப்பதற்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஒருவரை தூண்டும் செயலாக தொடர்ச்சியான விமர்சனங்களை முன்வைப்பதற்கான ஒருமுறைமையாக அமைந்திருந்தது. அவ்வாறானதொரு சூழ்நிலையில் நாம் அளித்த மிகவும் முக்கியமான அரசியல் வாக்குறுதி என்னவென்றால் அரசியல் தீர்மானம் ஒன்றின் ஊடாக வெளிப்படைத்தன்மை மிக்க ஜனநாயக முறைமையொன்றை அறிமுகம் செய்வதன் மூலம் மக்கள்நேய அரச நிர்வாக முறையொன்றை உருவாக்குவோம் என்று தெரிவித்திருந்தோம். 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட விடயங்களை நிறைவேற்றிக்கொள்ளவே எண்ணியிருந்தோம்.

ஆனாலும் இந்த இலக்குகளை மூன்று வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருக்கும் பட்சத்தில் நிறைவேற்ற முடிந்துள்ளதா என்ற பிரச்சினை சமூகத்தில் நிலவுகிறது. இந்த சபையை அமைத்து அது சரிவர இயங்குவதற்கான பின்புலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது ஜனாதிபதி என்ற வகையில் எனது பொறுப்பாக உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிலுள்ள முக்கியத்துவத்தை நன்றாக புரிந்துகொண்டதால் அரசியலமைப்பின் 33ஆவது சரத்தின் உபபிரிவு (இ) இல் 19ஆவது திருத்தில் உள்ளடக்குவதற்கு நான் தலைமை ஏற்றதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அரசியல் அமைப்பு சபையின் தலைமைத்துவம் ஏற்பது நாட்டின் மூன்றாவது குடிமகனான நீங்கள் தான். அதில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட விசேட நபர்கள் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இவ்வாறான ஆளுமை பொருந்திய சபையொன்றின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கோ தகாத யோசனைகளை முன்வைப்பதற்கோ அரசியல் அமைப்புக்கு விரோதமான எந்தவொரு நடவடிக்கைக்கும் கடந்த நான்கு ஆண்டுகளாக நான் முன்வரவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஜனநாயக விரோத அல்லது அரசியல் அமைப்புக்கு விரோதமான அச்சுறுத்தல்களை மேற்கொள்ளாமல் அரசியல் அமைப்பு சபையின் விருப்பத்திற்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு 33 (இ) சரத்துக்கு அமைய நான் எனது கடமைகளை சரிவர புரிந்துகொண்டு நடந்து கொண்டேன்.

ஆனால் இன்று தோற்றுவிக்கப்பட்டிருக்கும் நிலைமை காரணமாக இனியும் மௌனமாக இருக்க முடியாது. அரசியலமைப்பு சபை அரசியலமைப்புக்கு அனுகூலமாக நடடிவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றதா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. அதன் காரணமாக அரசியலமைப்பின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 31(1) (இ) பிரிவின் கீழ் அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் கண்டறிவதற்கான அதிகாரம் சட்டபூர்வமாக மாத்திரமல்ல பண்பாடான கடமையுமாகும். அரசியலமைப்பு சபையொன்று இயங்கும் போது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஒருவரின் அதிகாரங்களை மீறி செயற்படக்கூடாது.

ஏனென்றால் அரசியலமைப்பின் 3ஆவது மற்றும் 4ஆவது சரத்துக்கள் மூலம் மக்களின் நிறைவேற்று அதிகாரம் தேர்தலின் ஊடாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. முதன் முறையாக அரசியலமைப்பு சபையொன்றை நிறுவுவதற்கான யோசனை 17ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்ட போது உயர் நீதிமன்றத்தில் அது தொடர்பிலான அரசியலமைப்பு அனுகூலங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்னவென்றால் அரசியலமைப்பு சபையொன்றுக்கு ஜனாதிபதியின் அதிகாரங்களை மீறிச்செயற்பட முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

அச்சபை இயங்கும் போது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியுடன் இணைந்தும் ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தெளிவாக தெரிவித்துள்ளது. இந்த சட்டக் கோட்பாடுகள் அன்றும் இன்றும் ஒரே மாதிரியாக செல்லுபடியாகும். அதை தற்போதைய நிலைமைகளுக்கும் பொருத்திக்கொள்ள முடியும். ஆனால் இன்று அரசியலமைப்பு சபை நடந்து கொண்டிருக்கும் முறையை காணும் போது அரசியலமைப்பு சபையை நிறுவுவதன் மூலம் ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் மதிப்பளிக்கும் சமூகம் எதிர்பார்த்த எந்தவொரு விடயமும் இடம் பெறவில்லை என்பது தெளிவாகிறது.

நான் தெளிவான உதாரணம் ஒன்றின் மூலம் இதை தெளிவுபடுத்துகிறேன். அரசியலமைப்பின் 41(ஏ)(1) அமைய மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சபையினால் அதற்கு மூன்று மாதங்களுக்கு முன் இடம்பெற்ற விடயங்கள் பற்றிய அறிக்கையை எனக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அந்தப் பதவிகளுக்கு நியமித்த நபர்கள் தொடர்பில் இன்று நாட்டில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. விசேடமாக பொலிஸ்மா. அதிபர் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் அதி உயர் நீதிமன்றங்களான உச்ச நீதிமன்றத்திற்கும் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கும் நீதியரசர்களை நியமிக்கும் போது இந்த விடயம் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் முக்கியத்துவம் பெறுவது 41 (இ) ஆகும். அதற்கமைய உயர் நீதிமன்றம் மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் நீதியரசர்களை நியமிக்கும் போது சபையினால் நீதியரசரின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய இது கட்டாயமாக செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஜனநாயக அரச முறைமையினுள் அடிப்படை கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் முகமாக இந்த விடயம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டது. நீதிபதிகளின் செயற்பாடுகள் நேர்மை, வினைத்திறன், தொழிலுடன் சம்பந்தப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் விசாரிப்பதோ முடிவுகளை மேற்கொள்ளுதல் தொடர்பிலான அதிகாரம் எனக்கோ, அரசியலமைப்பு சபைக்கோ அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்படவில்லை.

அதன் பொறுப்பு பிரதம நீதியரசருக்கும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் அல்லது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறையான செயற்பாடுகளின் ஊடாக மட்டுமே அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இது தொடர்பில் எனக்கு இருந்த நுட்பமான புரிதலின் காரணமாக நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் போது அவர்களின் சேவை மூப்பை கருத்திற் கொண்டே பதவி உயர்வுகளை வழங்குவதற்கு அரசியலமைப்பு சபைக்கு பரிந்துரைகளை முன்வைத்தேன். ஆனால் எந்தவிதக் காரணங்களையும் தெரிவிக்காமல் அரசியலமைப்பு சபையினால் இந்தப் பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கான காரணம் என்ன? இதற்கான காரணத்தை கண்டறிவதற்கு அரசியலமைப்பு சபையினால் எனக்கு அனுப்பிவைத்த அறிக்கைகளை உன்னிப்பாக கவனித்தேன்.

ஆனால் அந்த அறிக்கைகளில் இந்த விடயம் பற்றி தெளிவாக குறிப்பிடப்படவில்லை. அது மாத்திரமன்றி இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் நீதியரசர் எதை தெரிவித்தார்? அவரின் பரிந்துரை என்ன? இந்த நீதிபதிகள் தொடர்பில் அவரது கருத்து என்ன? என்பது தொடர்பில் ஒரு வார்த்தையேனும் எனக்கு தெரிவிக்கப்படவில்லை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய நிலைப்பாடு**

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 23 ஜூன் 2019 இடம்பெற்ற தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 40 வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அப்போதைய ஜனாதிபதி கூறிய கருத்து.

சிறந்ததொரு நாட்டைக் கட்டியெழுப்ப அரசியலமைப்பின் 18 மற்றும் 19ஆவது திருத்தச் சட்டங்கள் இரத்துச் செய்யப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் சர்வாதிகாரத்தையும், 19 ஆவது திருத்தம் நிலையற்ற அரசாங்கத்தையுமே ஏற்படுத்தியுள்ளது. இவ்விரு திருத்தங்களையும் முழுமையாக இரத்துச் செய்தால் மாத்திரமே மக்களாணையினை மதிக்கும் ஒரு அரசாங்கத்தை உருவாக்க முடியும். கடந்த நான்கு வருட முறையற்ற அரசியல் நிர்வாகத்திற்கு 19ஆவது திருத்தமே மூல காரணம் என முன்னாள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் இந்தக் கருத்துகள் பலத்த விமர்சனங்களைத் தோற்றுவித்திருந்தன. குறிப்பாக 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்காக பாடுபட்ட அரசியல், சிவில் சமூக அமைப்புகள் இதனைக் கடுமையாக விமர்சித்துள்ளன. தனது கடந்த 5 வருட ஆட்சியில் உள்ள தவறுகளை மறைப்பதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மீது பழியைப் போடுவதாக அவை சுட்டிக்காட்டியிருந்தன. மேலும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை வரைவதில் முக்கிய பங்காற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன, அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூல வரைபினை எவ்வித மாற்றங்களுமின்றி முழுமையாக நடைமுறைப் படுத்தியிருந்தால் எவ்வித அரசியல் நெருக்கடிகளும் அரசியலமைப்பினை மையப்படுத்தி ஏற்பட்டிருக்காது எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

**முன்னாள் ஜனாதிபதியின் கருத்துக்கு லால் விஜேநாயக்கவின் பதில்**

"மைத்திரி மீண்டும் நிறைவேற்று அதிகாரங்களை கோருவது துரதிர்ஷ்டவசமானது". சர்வாதிகார அதிகாரங்களை குறைப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மீண்டும் நிறைவேற்று அதிகாரங்களை கோரி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவது துரதிர்ஷ்டவசமான நிலைமை என புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார். சுயாதீன நிறுவனங்களுக்கு தான் விரும்பிய நபர்களை நியமிக்க முடியாமலும் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாமலும் இருப்பதாகக் கூறும் ஜனாதிபதி, முன்னாள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் செயற்பட்டதை போல் நாடாளுமன்றத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து செயற்பட முடியாத சோகத்தை முன்வைத்து வருகிறார் எனவும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் மக்கள் கோரிய சுயாதீன நிர்வாகத்திற்கு பதிலாக சர்வாதிகார நிர்வாகம் உருவாகக்கூடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். கண்டியில் 30 ஜூன் 2019 நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராக் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே லால் விஜேநாயக்க இதனைக் கூறியுள்ளார்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலமே மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. நிர்வாகம் சுயாதீன ஆணைக்குழுக்களிடம் வழங்கப்பட்டுள்ளதே இதற்கு காரணம். 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலமே பொலிஸ் துறையும் சுயாதீனமாக மாற்றப்பட்டுள்ளது. அமைச்சர்கள், அவர்களின் மனைவிமார் மற்றும் பிள்ளைகளை கூட சட்டத்திற்கு முன் கொண்டு வரும் அளவுக்கு பொலிஸ் சுயாதீனமாக மாறியுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரியை கைது செய்ய முடிந்தது. ஒக்டோபர் 26 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியின் போது நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட முடிந்தது. இந்த போராட்டத்தை மறுபக்கம் திருப்ப நாட்டின் பிரதானியாக ஜனாதிபதி செயற்பட்டு வருவதே துரதிர்ஷ்டவசமான நிலைமை. 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி தற்போது கூறுகிறார். தனக்கு 62 இலட்சம் மக்கள் வாக்களித்ததாக ஜனாதிபதி கூறுகிறார். 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை கொண்டு வரவே மக்கள் அந்த வாக்குகளை அளித்தனர். தமக்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் தேவை என்று மக்கள் கூறினர். ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்றனர்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரினர். மக்கள் கோரியதையே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டது. தனது அதிகாரத்தை எடுத்து பிரதமருக்கு கொடுக்க போகின்றார்கள் என்று ஜனாதிபதி கூறினாலும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் அப்படி எதுவும் நடக்கவில்லை. அமைச்சர்களை பிரதமர் பெயரிட மட்டுமே முடியும். ஜனாதிபதியின் அதிகாரங்கள் பிரதமருக்கு வழங்கப்படவில்லை எனவும் லால் விஜேநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

**தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு**

தற்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் ஜனாதிபதியும் 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டதால் நிர்வாகத்துறைக்கும் (ஜனாதிபதிக்கும்) சட்டத்துறைக்கும் (பாராளுமன்றத்திற்கும்) இடையே பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளதாகவும் இது நிர்வாக நடைமுறையில் பல சிக்கல்கள் உருவாக்கியுள்ளதாகவும் எனவே 19ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும் என்றும் கூறிவருகின்றனர்.

**தற்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் ஜனாதிபதியும் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதால் நிர்வாகத்துறைக்கும் (ஜனாதிபதிக்கும்) சட்டத்துறைக்கும் (பாராளுமன்றத்திற்கும்) இடையே பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளதாகவும் இது நிர்வாக நடைமுறையில் பல சிக்கல்கள் உருவாக்கியுள்ளதாகவும் எனவே 19ஆவது திருத்தம் நீக்கப்பட்டவேண்டும் என்றும் கூறிவருகின்றனர்.**


(முற்றும்.)

# தேசிய அரசாங்கம் சாத்தியமில்லை

## ஐ.தே.க.வழியில் சஜித் அணி

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொது ஜன பெரமுன ஆகிய கட்சிகள், நாட்டு மக்களுக்குப் பொய்களைக் கூறி ஏமாற்றுவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, அக் கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கும் நோக்கம் தமது கட்சிக்கு இல்லை என்றும் உறுதிப்படுத்தினார்.**



கொழும்பில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேலும் தெரிவித்த அவர், புதிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் இராணுவத்தைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தி, நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் புறக்கணிக்கும் வகையில் செயற்படுகிறது என்றும் கொரோனா ஒழிப்புத் திட்டத்தையும் அரசியல் நிகழ்ச்சி நிரலாகவே அவர்கள்மேற்கொண்டு வருகின்றனர் என்றும் சாடினார்.

வைரஸ் பரவலை, யுத்தத்தை எதிர்கொள்வது போன்றே அரசாங்கம் எதிர்கொண்டதெனத் தெரிவித்த அவர், படையினருக்கு இந்த நோய் தொற்றியமைக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டுமென்றார்.

அரசாங்கம் எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டும் என்ற முனைப்பில் மாத்திரமே செயற்பட்டதெனவும் அதனாலேயே கடற்படையினர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகும் நிலை உருவானதெனவும் தெரிவித்த மத்தும பண்டார, இனவாதத்தைப் பலப்படுத்தியேனும் தேர்தலை வெற்றிகொள்ளவே அரசாங்கம் முயற்சிக்கிறது எனத் தெரிவித்ததோடு, இவ்வாறானவர்களுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி சிலர் பேசினாலும், அவ்வாறான தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கவில்லை எனவும் உறுதிப்படுத்தினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் தேசிய அரசாங்கத்தை அமைக்காது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் திட்டவட்டமாகத் தெரிவித்த நிலையில் சஜித் அணியும் தேசிய அரசாங்கத்தை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவில் பிரச்சினை இருந்தால் நிவர்த்தி செய்யப்படும் - அரசு உறுதி

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 5000 ரூபாய் கொடுப்பனவில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நுவரெலியா மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். இதனையடுத்து நுவரெலியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அவர் தலைமையில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் சுகாதார விடயங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தாலும் இறுதியில் சமுர்த்திக் கொடுப்பனவு பற்றியும், மாவட்டத்தில் எத்தனை பேருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது என அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர்,

"தோட்டத் தொழிலாளர்கள் 5 ஆயிரம் ரூபாவிற்கு குறைவான சம்பளம் பெறும் பட்சத்தில், குறைவான தொகையை ஈடுசெய்யும் வகையில் 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கும் வகையிலேயே சுற்று நிருபத்தில் ஏற்பாடு உள்ளது என அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சுட்டிக் காட்டினார்.



இது தொடர்பில் ஜனாதிபதி செயலணியுடனும் கலந்துரையாடி, ஏதேனும் தவறு இடம்பெற்றிருக்கும் பட்சத்தில் மீண்டும் அமைச்சரவைப் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" எனக் கூறினார். (இ-7)

# பெரியநீலாவணை தொடர்மாடியில் மோட்டார் சைக்கிளுக்கு தீ வைப்பு



(பெரியநீலாவணை)

பெரியநீலாவணை தொடர்மாடி வீட்டுத்திட்டத்தில் கடந்த 11ஆம் திகதி இரவு வீட்டின் கீழ்த் தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டது.

இந்தத் தீ வைப்பு சம்பவத்தால் அருகிலிருந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள், வீட்டின் மின்மானிகள் பொருத்தப்பட்டிருந்த பிரதான அறை உட்பட சில பகுதிகளுக்கும் சேதம் ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை கல்முனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-5-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அடுத்தவர் மேல் பழி!

எதுக்கெடுத்தாலும் அடுத்தவர்கள் மேலே பழிபோடுவது மனுசனுக்குக் கைவந்த கலை. ஒரு பேச்சாளர் இதுக்குச் சில வேடிக்கையான உதாரணங்களைச் சுட்டிக்காட்டினார்.

மனுசன் டிக்கட் வாங்காமல் ரயிலிலே பிரயாணம் செய்கிறான். எப்படியடா வந்தாய் என்று கேட்டால் "திருட்டு ரயிலிலே" வந்தேன் என்கிறான் பாருங்கள். திருட்டுத்தனம் செய்தது இவன். ரயில் திருட்டு ரயிலாம். அதுக்குக் கெட்ட பெயர்.

அதேமாதிரித்தான் இவன் நோட்டு அடிக்கிறான். ஆனால் நோட்டுக்குப் பேர் கள்ள நோட்டு. சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுறதும் விற்கிறதும் இவன். ஆனால் அதுக்குப் பேர் கள்ளச் சாராயம்.

இதுதான் இன்றைக்கு உலகம். இந்தத் தவறுக்கு யார் காரணம் என்று விசாரியுங்கள். ஐயையோ அது நான் இல்லை சேர் அவன் தான் என்று காட்டிக் கொடுக்கிறவர்கள் தான் அதிகம். அலுவலகங்களிலேயும் அப்படித்தான். பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற மனிதர்கள் அதிகமாகிவிட்டார்கள்.

ஒரு கதை ஒன்று உண்டு. ஒரு சுவர். அதுபாட்டுக்கு நின்று கொண்டிருந்தது. அதிலே ஒருத்தன் கையை வைத்திருக்கிறான். அந்தச் சுவர் பொத்தென்று கீழே விழுந்து விட்டது. "ஏன்டா இந்தச் சுவரை விழுத்தினாய்" என்று கேட்டிருக்கிறார்கள்.

"ஐயையோ என் மேலே தப்பு இல்லை. சுவர் உறுதியா இல்லை. அதைக் கட்டின கொத்தனார்தான் இதுக்குக் காரணம்" என்றான். உடனே கொத்தனாரைத் தேடிக் கொண்டு போனார்கள். அவரைக் கேட்டார்கள்.

இதுக்கு அவர் சொன்னார்...

"என் மேலே தப்பு இல்லை. சீமெந்தையும் மணலையும் கலந்து கலவை போட்டுக் கொடுத்தவர் தான் காரணம். அவர் தான் கவனக் குறைவாக கலவையிலே தண்ணியை அதிகமாக ஊற்றிப் போட்டார்" என்றார். உடனே கலவை போட்டவரைத் தேடிக்கிட்டுப் போனார்கள். அவர் சொன்னார்...

"அந்த மண்பானை வாய் அகலமாக இருந்துள்ளது. லேசா சாய்ச்சதும் தண்ணி அதிகமாக கொட்டிப் போய்விட்டது. அந்தப் பானையை செய்தவர் தான் இதுக்குக் காரணம்" என்றார்.

உடனே பானை செய்தவரைத் தேடிக்கொண்டு போனார்கள். அவர் சொன்னார்..."என் மேலே தப்பு இல்லைங்க. நான் அந்தப் பானையை செய்து கொண்டிருந்த போது அந்த வழியாக ஒரு நடனம் ஆடுற பெண்மணி போய்க்கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்துக் கொண்டே இந்தப் பானையைச் செய்ததாலே அது இப்படி ஆகிவிட்டது. அந்த நேரம் அவள் அந்த வழியாகப் போகாமல் இருந்திருந்தால் பானையினுடைய வாய் இப்படி அகலமாக போயிருக்காதுங்க" என்றார்.உடனே அந்த நடனமாது யார் என்று தேடிக்கொண்டு போனார்கள். அந்த அம்மா சொன்னார்...

"ஒரு சலவைத் தொழிலாளியிடம் என்னுடைய துணிகளை எல்லாம் வெளுக்கிறதுக்காகப் போட்டிருந்தேன். சொன்ன நேரத்திலே அவர் கொண்டு வந்து கொடுக்கவில்லை. எனக்கு அது ஒரு நிகழ்ச்சிக்காக அவசரமாகத் தேவைப்பட்டது. நானே அவர் இருக்கிற இடத்துக்குத் தேடிப் போனேன். அதனாலே இந்த வழியாகப் போகவேண்டியதாயிற்று. அவர் துணிமணி களைக் கொண்டு வந்து கொடுத்திருந்தால் நான் இந்த வழியாக வந்திருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது" என்றாள்.

உடனே சலவைத் தொழிலாளியைத் தேடிக்கொண்டு போனார்கள். "ஐயா நான் வழக்கமாக ஆற்றிலே துணி துவைக்கிற கல்லிலே ஒரு சாமியார் உட்கார்ந்திருந்தார். கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்து கொண்டிருந்தார். அவருடைய தவத்தைக் கலைக்கிறதுக்கு எனக்கு மனசு வரவில்லை. அதுதான் பேசாமல் இருந்து விட்டேன்" என்றார்.

உடனே எல்லோரும் சாமியாரிடம் போனார்கள். அவர் இன்னமும் தவத்திலேயே இருக்கிறார். அன்றைக்கு அவர் மௌன விரதம். எதுவும் பேசமாட்டார்.

அவரிடம் இவர்கள் போய் நின்று "ஏன் சாமியாரே அந்தச் சுவர் விழுந்ததுக்கு நீங்கள் தான் காரணமா?" என்று கேட்டார்கள். அவர் மௌனமாக இருந்தார்.

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி. இவர்தான் குற்றவாளி என்றான் ஒருத்தன். போடுங்கடா தலையிலே என்றான் இன்னொருத்தன். உடனே போட்டார்கள் ஒரு போடு அவர் தலையிலே!" அவர் பொத்தென்று மௌனமாகவே கீழே சாய்ந்து விட்டார் அந்தச் சுவர் மாதிரியே.

பாருங்க சேர்...சில சமயம் மௌனமாக இருக்கிறது கூட ஆபத்தாக வந்து முடியும் போல இருக்கு. சிலசமயம் அது சௌகரியமாகக்கூட இருக்கும். ஒரு சங்கீத வித்துவான் சொன்னார்...

"சேர் இன்றைக்கு சபையிலே எனக்குத்தான் மக்கள் அதிகமாக கைதட்டினார்கள்" என்றார். "எவ்வளவு நேரம் பாடினீர்கள் என்று கேட்டேன்.நான் மேடையிலே ஏறி மக்களைப் பார்த்து...

இன்றைக்கு நான் பாடப் போறதில்லை. மௌன விரதம் இருக்கலாம் என்று நினைக்கிறேன் என்றேன் சேர் அவ்வளவு தான். மக்கள் எவ்வளவு சந்தோசப்பட்டார்கள் தெரியுமா?" என்றார்.

பிறரை உயர்வாகக் கருதுபவன் தானும் உயர்கிறான். தாழ்வாகக் கருதுபவன் தானும் தாழ்கிறான்! - கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உடன்பிறந்தே கொல்லும் வியாதி

தமிழ் இனம் தொடர்பில் ஆய்வு செய்த டாக்டர் மு.வரதராசனார் எம் இனத்தின் தாழ்வு நிலைக்குரிய காரணங்களைக் கண்டறிந்தார்.

போட்டி, பொறாமை, காட்டிக்கொடுப்பு என்பன நம் இனத்தின் பகை வேர்கள் என்பது அவரின் முடிவு.

அதாவது தமிழினத்துக்கு எதிரி வெளியில் இல்லை. நம் இனத்துக்குள்ளேயே நமக்கான எதிரி இருக்கின்றான் என்பது டாக்டர் வ்ரதராசனாரின் முடிவில் இருந்து நாம் கண்டறியக்கூடிய உண்மை.

எதிரி நமக்குள் இருந்தால் பகைவனை வெல்வது முடியாத காரியம்.

இதனாலேயே தமிழினம் அன்று முதல் இன்றுவரை இழப்புக்களைச் சந்திக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி இருக்கிறது.

ஆம், இனி யாராலும் முடியாது என்று உலகு வியக்கக்கூடிய விடுதலைப் போராட்டத்தை நடத்தியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் என்பது சிங்கள இனத்துக்கு எதிரான போராட்டம் அல்ல. மாறாக அது ஈழத் தமிழினத்தின் வாழ்வுக்கானது.

விடுதலைப் புலிகள் நடத்திய ஆயுதப் போராட்டம் உலகளவில் வியக்க வைத்தது எனில், அதற்கு அவர்களிடம் இருந்த ஆயுத பலம் காரணமன்று.

மாறாக; அவர்களின் தியாகம், ஒழுக்கம், உயிரினும் மேலாகத் தம் தமிழ் இனத்தை நேசித்தமை என்பனவே காரணமாகும்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை உலக அரசியல் ஆய்வாளர்கள் வியந்து கூறியுள்ளனர்.

அதுமட்டுமல்ல, சிங்களத் தலைவர்களும் விடுதலைப் புலிகளின் தியாகத்தைப் போற்றியுள்ளனர்.

வட பகுதிக்கு வருகை தரும் சிங்கள மக்கள், தலைவர் பிரபாகரனின் வீட்டுக்குச் சென்று அவர் வாழ்ந்த நிலத்து மண்ணை எடுத்துச் செல்வதைத் தங்களின் பேறாகக் கருதுவர்.

பிரபாகரன் மாவீரன் என இலங்கையின் படைத்தரப்பு பகிரங்கமாகக் கூறிய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

என்ன செய்வது காலப்பிழைப்போல உலகம் நம்மோடு பகைத்துக் கொள்ள ஓர் உன்னத விடுதலைப் போராட்டம் வீழ்ச்சி கண்டது.

உண்மையில் ஆயுதப் போராட்டம் சரியா? என்று யாரேனும் கேட்டால், அதற்கான மறுத்தான்; ஆயுதப் போராட்டம் ஏன் ஏற்பட்டது என்பதாக இருக்க வேண்டுமேயன்றி, நடந்து முடிந்த ஆயுதப் போராட்டத்தை நியாயமற்றதாக்குவது ஒட்டுமொத்தத் தியாகத்தையும் குழி தோண்டிப் புதைப்பதாகும்.

எனவே நாங்கள் வாழ அவர்கள் உயிர் விட்ட தியாகத்தை எச்சந்தர்ப்பத்திலும் எவரும் ஊறு செய்து விடக்கூடாது.

இதனை விடுதலைப் புலிகளின் எதிரிகள் கூடச் செய்யலாகாது.

ஏனெனில் அவர்கள் இன்று இல்லை. அவர்கள் இல்லாதவிடத்து குற்றம் கூறுவது அறமன்று.

# நாட்டிற்கு அழைக்க நடவடிக்கை எடுங்கள்

## தமிழகத் தமிழர்கள் கோரிக்கை

(முறிகண்டி)

இந்தியாவின் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்த எங்களை மீண்டும் நாட்டிற்கு அழைக்க நடவடிக்கை எடுங்கள் என இந்தியத் தமிழர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

கிளிநொச்சியில் தங்கியுள்ள மூவர் நேற்று ஊடகச் சந்திப்பின் ஊடாக குறித்த வேண்டுகோளை விடுத்தனர்.

கடந்த 2 ஆம் மாதமளவில் இலங்கைக்கு 8 பேர் வருகை தந்ததாகவும் அவர்களில் மூவர் கிளிநொச்சியிலும், ஐவர் முல்லைத்தீவிலும் தங்கியுள்ளனர். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இலங்கையிலேயே தங்கியிருந்த அவர்கள் தாய்நாடு திரும்புவதற்கான கோரிக்கையை முன்வைத்தனர்.

உணவு, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும், தம்மை தமது குடும்பத்தினருடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழகத்தின் மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்த தாம் மீண்டும் நாடு திரும்புவதற்கு விருப்பம் இருந்தும், செல்ல முடியாத நிலையில் இங்குள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-100)

# பம்பைமடு முகாமிலிருந்து மேலும் 129 பேர் விடுவிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமுக்கு கடந்த இரு வாரங்களிற்கு முன்னர் கடற்படையைச் சேர்ந்த குடும்பத்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 400 இற்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று இருப் பது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள குறித்த முகாமிற்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 192 பேர் பேருந்துகளின்மூலம் அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டதுடன்கொவிட்-19 தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட 129 பேர் நேற்றையதினம்தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்கள தனிமைப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் இதன் போது வழங்கப்பட்டன.

நாவலப்பிட்டி, அவிசாவளை, நுவரெலியா, கண்டி, குருநாகல், மொனரா கலை, கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்களே இதன்போது விடுவிக்கப்பட்டனர்.

குறித்த முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 161 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும்31பேர் குறித்த முகாமில் தனி மைப்படுத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-299)

# அபிவிருத்தித் திட்டங்களை தடுக்க முயற்சி

## நகரசபைத் தவிசாளர் குற்றச்சாட்டு

(மன்னார்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மன்னார் நகரத்தை அழகுபடுத்தி பல்வேறு கட்டடங்களை அமைத்து நகர சபைக்கு வருமானத்தை ஈட்டி அந்த வருமானத்தின் ஊடாக நகரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்கின்ற ஒரு திட்டத்தை முன்னெடுத்து வரும் சந்தர்ப்பத்தில் அரசியல் வாதிகள்சிலர்குறித்தவேலைத் திட்டங்களை தடுத்து நிறுத்த முற்படுகின்றனர் என மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் குற்றம சாட்டினார். மன்னார் நகர சபையின் விசேட அமர்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதில அவர் மேலும தெரிவிக்கையில்,

சபையின் தீர்மானத்திற்கு அமைவாக சட்ட விரோதமாக அங்காடி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த அனைத்துக் கடைகளும் அகற்றப்பட்டு அதற்கான மாற்று இடங்களும் வழங்கப்பட்டு அந்த இடங்களுக்கு நாங்கள் துப்புரவுப் பணிகளை செய்து வந்தோம்.

இந்நிலையில் தமது சங்கக் கட்டடம் உடைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் எமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

உண்மையில் அந்த இடம் மன்னார் நகர சபைக்குச் சொந்தமானது. அபிவிருத்தி கருதி நாங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தோம்.

இந்த நிலையில் நகரத்தின் அபிவிருத்தியை நிறுத்த வேண்டும். அபிவிருத்திக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு சில காரணத்தால் சில அரசியல்வாதிகளாக இருக்கின்ற சட்டத்தரணிகள் சிலர் தமது சுய லாபத்திற்காகவும்,தமது அரசியல் ஆதாயத்திற்காகவும் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தியை முடக்க வேண்டும் என்ற நோக்கத்தாலும் இவ்வாறான வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-285)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மனிதன் தன் உரிமைக்காக இன்னொரு மனிதனிடம்தான் போராட வேண்டியிருக்கிறது.

- வி.எஸ்.காண்டேகர்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** அராலிப் பிரதேசம், செட்டியார் மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம், அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** இராஜேந்திரகுளத்திலிருந்து உளுக்குளம் வரை, கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, துட்டுவாகை, முகத்தான்குளம் 2ஆவது பண்ணை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 10 மணியிலிருந்து 2 மணிவரை உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் வரை, வங்காலைப் பிரதேசம், சீனத்துறை முகம வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சத்திய தரிசனம்

## பெற்றோர் நம் தெய்வம்



❖ வாழ்க்கை என்னும் நாணயத்திற்கு இன்பம், துன்பம் என இருபக்கங்கள் இருக்கின்றன.

❖ உலகில் உள்ள அனைத்தும் மாறுதலுக்குட்பட்டது. மாற்றம் என்ற ஒன்று மட்டுமே என்றைக்கும் மாறாதது.

❖ மனித உடலை நமக்களித்த பெற்றோரை, கடவுளாக மதித்துப் போற்றுங்கள்.

❖ குழந்தைகள் பஜனை, தியானம் போன்றவற்றில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

❖ நான்என்ற ஆணவம்கொண்டவனை துன்பம்தொடரும்

❖ சமூகப்பணியில் ஈடுபடுபவர்களிடம் தற்பெருமை கூடாது. மன அடக்கத்துடன் இறைவன் அளித்த வாய்ப்பாக எண்ணி தொண்டாற்றுங்கள்.

❖ மற்றவர்களின் வற்புறுத்தலுக்காக தொண்டில் ஈடுபடாதீர்கள். அன்புக்காக தொண்டாற்றுவதே சிறந்தது.

❖ வாழ்க்கை ஒரே திசையில் செல்லும் நீரோட்டம் என்பதால் பயனுள்ள வகையில் நேரத்தை செலவழிப்பதே அறிவுடைமை.

# இறுதிச் சடங்கில் குண்டுவெடிப்பு! 40 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

(காபூல்)

## பலர் படுகாயம்

**ஆப்கானிஸ்தானில் பொலிஸ் அதிகாரியின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியின் போது நடத்தப்பட்ட குண்டு வெடிப்புத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர்.**



ஆப்கானிஸ்தானில் 2001 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அந்நாட்டின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகள் பொதுமக்களை குறிவைத்து பயங்கரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயங்கரவாத குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். உள்நாட்டு படையினருக்கு உதவியாக அமெரிக்கா தலைமையினான கூட் டுப்படைகளும் அதிரடித் தாக்குதல் களை நடத்தி வருகின்றனர்.

இதனால், அரச படையினருக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இதற்கிடையில், அந்நாட்டின் நஹறாங்கர் மாகாணம் ஹ்ºவா மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஹஜீ ஷேக் இகராம் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். இதையடுத்து, அவரது இறுதிச்சடங்கு நேற்று நடைபெற்றது. இந்த இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் அதிகமானோர் பங்கேற்றனர்.

இந்நிலையில், இறுதிச் சடங்கு நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தில் திடீரென சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் 40 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு தலிபான் பயங்கரவாத அமைப்பே காரணமாக இருக்கக்கூடும் என ஆப்கானிஸ்தான் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2-8)

## பயங்கரவாதிகள் கொடூரத்தாக்குதல்; கிராம மக்கள் 20 பேர் பலி!



(நியாமி)

நைஜர் நாட்டில் டெகுயோ கிராமங்களுக்குள் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் கிராமவாசிகள் 20 பேர் உயிரிழந்தனர். ஆபிரிக்க நாடான நைஜீரியாவை புகலிடமாக்க் கொண்டு இயங்கி வரும் போகோஹறாம் பயங்கரவாதிகள் அயல் நாடுகளான நைஜர், சாத் ஆகிய நாடுகளிலும் காலூன்றி பயங்கரவாதத்தை பரப்பி வருகின்றனர்.

இவர்கள் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்களை குறிவைத்து பயங்கரவாத தாக்குதல்களை நடத்துவதோடு, கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி மக்களை கொன்று குவிப்பதையும் வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் நைஜர் நாட்டின் வடக்குப் பகுதியில் தில்லாபரி பிராந்தியத்தில் உள்ள கடாபோ மற்றும் கொய்ரா டெகுயோ கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் புகுந்து திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

மோட்டார் சைக்கிள்களில் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கண்ணில் பட்டவர்களையெல்லாம் குருவியை சுடுவது போல் சுட்டுத்தள்ளினர்.

இந்த கொடூரத் தாக்குதலில் கிராம வாசிகள் 20 பேர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயம் அடைந்தனர். பயங்கரவாதிகள் அப்பாவி மக்களை கொன்று குவித்ததோடு மட்டும் இல்லாமல், அங்கிருந்த கடைகளை சூறையாடி திருடிச் சென்றனர். (ஜ-2-8)

## மகப்பேற்று வைத்தியசாலை மீது துப்பாக்கிச்சூடு; குழந்தைகள் உட்பட 14 பேர் மரணம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மகப்பேற்று வைத்தியசாலை மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல பகுதிகளை தங்கள் கட்டுப் பாட்டில் வைத்துள்ள தலிபான், ஐ.எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகள் அப்பாவி பொது மக்களை குறிவைத்து கொடூரத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றன.

இந்தப் பயங்கரவாத குழுக்களை ஒழிக்க அரச படையினரும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டுப் படையினரும் தரைவழி மற்றும் வான் வெளித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் தலிபான் உள்ளிட்ட பயங்கரவாதக் குழுக்கள் மீது ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் சமீப காலமாக அதிரடித் தாக்குதல்களில் ஈடுபட்டு பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த பல கிராமங்களை மீட்டு வருகின்றனர்.

இதனால் இராணுவத்திற்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கும் இடையே அவ்வப்போது பயங்கர மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் மேற்கே அமைந்துள்ள மகப்பேற்று வைத்தியசாலையில் நேற்று முன்தி னம் பயங்கரவாதிகள் திடீரென புகுந்து சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்த கொடூரத் தாக்குதலில் பிறந்த குழந்தைகள் இருவர், அவர்களின் தாய்மார்கள், தாதி மார் உட்பட 14 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2-8)

## ஒரு மேசை, ஒரு கதிரை; பரிமாறுபவர் இல்லை சமூக விலகலுக்கு எடுத்துக்காட்டாகும் உணவகம்

(ஸ்டாக்ஹோம்)

கொரோனாவை விரட்டும் வகையில், சமூக விலகலை மையப்படுத்தி செயற்படும் சுவீடன் ஹோட்டலுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது. சீனாவில் உருவான கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

கொரோனா வைரஸின் தாக்கத்தால் உலகம் முழுவதும் பாதிப்படைந்தோர் .எண்ணிக்கையும் பலியானோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சுவீடன் நாட்டில் கொரோனா வைரஸால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 27 ஆயிரத்தை தாண்டியது. கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,300-ஐ தாண்டியது.



கொரோனா வைரஸில் இருந்து தற்காத்துக் கொள்ள சமூக விலகலை கடைப்பிடிக்க வேண்டும் என அனைத்து நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், கொரோனாவை விரட்டும் வகையில், சமூக விலகலை மையப்படுத்தி செயற்பட்டு வரும் சுவீடன் ஹோட்டலுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது.

சமூக விலகலை கருத்திற் கொண்டு சுவீடன் நாட்டின் வேர்ம்லாந்தில் டேபிள் ஃபார் ஒன் என்ற பெயரில் ஹோட்டல் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டலில் ஒரு மேசை, ஒரு நாற்காலி மட்டுமே போடப்பட்டிருக்கும். அதில் ஒருவர் மட்டுமே அமர்ந்து உணவு சாப்பிடும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஹோட்டலில் உணவு பரிமாறுபவர் கிடையாது. கயிறு ஒன்றில் பிக்னிக் கூடை கட்டப்பட்டு அதில் உணவு வைத்து மேசைக்கு அனுப்பப்படுகிறது.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குப் பிறகு மக்களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவுள்ளன. அதில் சிறிய முன்னுதாரணமாக விளங்குவது இந்த "டேபிள் பார் ஒன் ஹோட்டல்" என்றால் மிகையில்லை. (ஜ-2)

## வாரத்தில் 7...

படும் என்பதால் ஏழு நாட்களும் ஆசிரியர்கள் அல்லது மாணவர்கள் சுழற்சி முறையில் வகுப்புகளில் கலந்து கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

"ஒவ்வொரு ஆசிரியரும் மாணவரும் வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே பாடசாலைக்குச் சென்றால் போதும். பாடத்திட்டங்களை முடிப்பதற்கான இறுதி இலக்கைக் கொண்டு வகுப்புகளில் கற்பித்தல் ஒரு முன் திட்டமிடப்பட்ட பொறிமுறையில் ஏற்பாடு செய்ய முடியும் என்றால் அது போதுமானது என்று நாங்கள் சிந்தித்து வருகின்றோம்.

புதிய திட்டமிடலில், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைத் தடுக்க 30க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பை குறைந்தபட்சம் இரண்டு குழுக்களாக மட்டுப்படுத்த வேண்டும்" என்று அமைச்சர் அழகப்பெரும குறிப்பிட்டார்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட சுமார் 868 பாடசாலைகளுக்கு புதிய பொறிமுறையைத் தழுவுவது எளிதல்ல. ஆனால் நாங்கள் அதைச் செய்ய வேண்டும்.

ஏனென்றால் கிட்டத்தட்ட 4.5 மில்லியன் மாணவர்கள் மற்றும் சுமார் 3 லட்சம் ஆசிரியர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி தான் எங்கள் முன்னுரிமை என்று அமைச்சர் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதன் மூலம் நாடு இயல்புநிலைக்கு வந்தபின், பாடசாலைகள் முறையாக திறக்கப்படுவதற்கு முன்பு, 10 ஆயிரத்து 194 பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வருதை தர வேண்டும்.

பாடசாலைகளைத் திறக்க முதற்கட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பு கிருமி நீக்கம் செய்யப்படும். பாடசாலைகள் முழுமையாக பாதுகாப்பாகவும், கல்வி நடவடிக்கைகளைத் தொடங்கவும் தயாரான பின்னர், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும், பின்னர் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கும், இறுதியாக ஆரம்பப் பிரிவுக்கும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

பாடசாலை வளாகத்தில் மாணவர்கள் அதிக அளவில் ஒன்றிணைவதைத் தடுக்க இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கு வெவ்வேறு நேரங்களில் பாடசாலை இடைவேளைகள் சுழற்சி அடிப்படையில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அழகப் பெரும தெரிவித்தார்.

மார்ச் 20 முதல் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக மொத்தம் 276 பாடசாலை மணித்தியாலங்கள் இழக்கப்பட்டுள்ளன.

மேலும் முடிவடையாத பாடத்திட்டங்களை எவ்வாறு முடிப்பது என்பது குறித்த பிரச்சினைக்கு தாம் விரைவில் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## நல்லூர் பிரதேச...

காயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் சுன்னாகம் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த தே. நடேசு (வயது- 44) என்பவர் மீதே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவர் தனது கடமையை முடித்துக் கொண்டு சுன்னாகத்தில் உள்ள தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது, இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு அருகில் வைத்து வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளானார்.

தாக்குதலுக்கு இலக்கான இவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,114)

## யாழில் 36...

கொரோனாத் தொற்றில்லையென உறுதிப் படுத்தப்பட்டுளளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம-3,18)

## முன்னணியின்...

பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழவு நேற்று செம்மணிப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வு ஆரம்பமாக விருந்தபோது, அப்பகுதிக்கு வருகைதந்த யாழ்ப்பாண பொலிஸார் நிகழ்வினை நடத்த விடாமல் தடுப்பதற்காக அஞ்சலி நிகழ்வுக்கு வந்திருந்தவர்களை அங்கிருந்து அகற்ற முனைந்தனர்.

எனினும், சுகாதார நடைமுறைகளை பின்பற்றியே நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்து நிகழ்வை ஆரம்பிக்க முயற்சி செய்தார்.

இந்த நிலையில், மூன்று மோட்டார் சைக்கிள்களில் ஆறு இராணுவத்தினர் அங்கு வந்து பொலிஸாருடன் இணைந்து நிகழ்வை தடுக்க முயன்றனர். தடைகளை மீறி நிகழ்வுகளை நடத்த முற்பட்டபோது, நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் வீடுகளில் தனிமைப்படுத்த நேரிடும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர்.

எனினும், சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய சமூக இடைவெளியை பேணி முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நினைவு கூர்ந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வுகள் முடிவடைந்ததும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களை பொலிஸார் தனித்தனியாக ஒளிப்படம் எடுத்து அவர்களின் விபரங்களையும் பதிவு செய்துள்ளனர். (ம-3)

## கைதாகி மறிய...

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மீது அவதூறு பரப்பும் வகையில் வெள்ளை வான் கடத்தல் சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கு நீதவான் நீதிமன்றத்தால் கடந்த டிசம்பர் 30ஆம் திகதி வழங்கப்பட்ட பிணை உத்தரவு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சந்தேகநபரான ராஜித சேனாரத்ன தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவின் மூலம், ராஜித சேனாரத்னவை கைது செய்வதற்கான அதிகாரம் குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கின்றது.

இந்நிலையில் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, நேற்று மாலை குற்றவியல் விசாரணைப் பிரிவில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

கைதான ராஜித சேனாரத்னவை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கோவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக புதிதாக சிறைவரும் கைதிகள் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலினால் 14 நாட்கள் பூசா, நீர்கொழும்பு, பல்லன்சேன மற்றும் போகம்பர ஆகிய சிறைச்சாலைகள் வளாகத்தில் உள்ள கட்டிடங்களில் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

14 நாட்கள் தனிமைப்படுத்திய பின்னரே அவர்கள் சிறைக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்நிலையில், தற்போது விளக்கறியலில் வைக்கப்படவுள்ள ராஜித சேனாரத்ன தனிமைப்படுத்தலுக்காக நீர்கொழும்பு - பல்லன்சேனவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 19 அமைச்சர்...

கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை ராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

குறித்த 19 முக்கிய உறுப்பினர்களுக்கு எதிராக நிதிமோசடிகள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முக்கிய உறுப்பினர்களில் ரணில் விக்கிரமசிங்க, மலிக் சமரவிக்கிரம, ரவி கருணாநாயக்க, தலதா அத்துகோரல, ராஜித சேனாரத்ன மற்றும் ஹரிசன் ஆகியோர் அடங்குவதாக மகிந்தானந்த தெரிவித்துள்ளார்.

மோசடி உட்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது நிதி மோசடிகளுக்கு எதிராக பொலிஸார் அதனை விசாரணை செய்யாமல் கிடப்பில் போட்டு விட்டதாக மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (ம-3)

## மாவட்டங்களுக்...

வரத்து சேவைகள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்தியாவசிய மற்றும் அவசர கடமைகளுக்கு வர முயற்சிப்போருக்கான விசேட ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பொதுப்போக்குவரத்து நடைமுறைகளை வழமைக்கு கொண்டுவர அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுப்போக்குவரத்தை இரண்டு வாரங்களில் வழமைக்கு கொண்டுவர அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. இது கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் நிலைமைகளை கருத்தில் கொண்டே இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பொதுப்போக்குவரத்தை வழமைக்கு கொண்டுவந்தாலும் கூட பயணிகள் எவ்வாறு பயணிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் உள்ளது. பேருந்துகள் மற்றும் புகையிரதங்களில் பயணிக்கும் விதிமுறைகள் எவ்வாறு என்பது குறித்து சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து இப்போது தடுக்கப்பட்டுள்ள போதிலும் நிலைமைகளை பொருத்து அடுத்த வாரம் திங்கட்கிழமை தொடக்கம் மாவட்டங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்தை ஆரம்பிக்க முடியும். அது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு பொதுப்போக்குவரத்தை முன்னெடுக்க அதிக வாய்ப்புகள் உள்ளது.

அதேபோல் அரச மற்றும் தனியார் அதிகாரிகள் மட்டுமே இப்போது போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் பேருந்துகளிலும் புகையிரதங்களிலும் குறிப்பிட்ட அளவில் எவரும் வருவதாக பதிவாகவில்லை.

எனவே அத்தியாவசிய கடமைகளில் ஈடுபட அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் தம்மை பதிவு செய்துகொண்டு வர முடியும். தனியார் துறையினர் அவ்வாறு மாவட்டங்களுக்கு இடையில் பயணிக்க வேண்டுமானால் அதற்கான கோரிக்கையை எமக்கு முன்வைத்தால் போக்குவரத்து ஏற்பாடுகளை செய்து கொடுக்க தயாராகவே உள்ளோம் என்றார். (ம-3)

## நாடு முழுவதும்...

நாட்களில் நாடு முழுவதும் மழையுடனான வானிலை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

மத்திய, சப்ரகமுவ, ஊவா, தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களிலும் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-3)

## விடுவிக்கப்பட்ட...

களை கையளிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்க தமக்கு கால அவகாசம் வேண்டும் எனவும் உயர் நீதிமன்றுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கெதிராக 2003ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகள் நேற்று மீள் விசாரணைக்கு வந்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ உள்ளிட்ட நீதியரசர்கள் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்த நிலையில் மனுதாரரான மாவை சேனாதிராசா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மன்றில் ஆஜரானார்.

சுமார் 3640 ஏக்கர் காணிகள் இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயங்களுக்காக அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் 50 வீதமான காணிகள் பொதுமக்களிடம் மீள கையளிக்கப்பட்டதாக அரசின் சார்பில் மன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அவ்வாறு 50 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டு பொதுமக்களுக்கு கையளிக்கப்பட்டாலும், அந்த காணிகளுக்குரிய உறுதிகளோ வேறு ஆவணங்களோ அரசு வழங்கவில்லை எனவும் அதனால் அக்காணிகள் குறித்து உறுதியற்ற தன்மை நிலவுவதாகவும் மனுதாரர் தரப்பின் சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மன்றில் சுட்டிக்காட்டினார்.

அதனால் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு உறுதிகளை வழங்கவும், எஞ்சிய 50 வீதமான காணிகளை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் உயர் நீதிமன்றில் கோரினார்.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட அரச சட்டவாதி ரஜீவ் குணதிலக, இக்கோரிக்கை தொடர்பில் செயற்பட அரசுக்கு கால அவகாசம் வேண்டும் என கோரினார்.

இந்நிலையில் சிரேஷ்ட அரச சட்டவாதி ரஜீவ் குணதிலக கோரியதற்கு அமைய நீண்ட கால அவகாசம் வழங்கிய உயர் நீதிமன்றம் வழக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (ம-3)

## விசாரணைகள்...

பான விசாரணைகள் நிறைவடையும் வரை விருப்பு இலக்கங்களை விநியோகிக்காமல் இருக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

விருப்பு இலக்கங்களை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் அந்த நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ம-3)


## 893...

கோவிட் - 19 வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 893 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

### வீட்டில் விளக்குகளை ஏற்றி

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் இறந்தவர்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்

## சீ.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் மாலை 6 மணி 18 ஆவது நிமிடத்தில் ஒவ்வொரு வீட்டிலும் விளக்குகள் ஏற்றப்பட்டு மக்கள் இறந்தவர்களுக்காக பிரார்த்தனை செய்யுமாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் வைத்து நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வருடம் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் நிகழ்வு கொரோனாவின் பாதிப்பு இருக்கின்ற நேரத்திலே வருகின்றபடியால் பலவிதமான தடங்கல்களை நாங்கள் எதிர்நோக்க இருக்கின்றோம்.

முள்ளிவாய்க்காலுக்குச் சென்று எங்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கும் வண்ணம் விளக்குகளை ஏற்றி மௌனமாக இறந்தவர்களைப் பற்றி சிந்திக்க கூடிய ஒரு சூழல் தற்போது இருக்கின்றதோ என்று எங்களுக்குக் கூறமுடியாது இருக்கின்றது.

அவ்வாறு செய்யக் கூடியவர்கள் அங்கு சென்று ஒரு விளக்கேற்றி மௌனமாக அஞ்சலி செலுத்தி வரக்கூடும் என்றால் மிகவும் நன்று.

தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது பொலிஸாருடைய, படையினருடைய எதிர்ப்புகள் இவற்றில் இருப்பதை நான் காண்கின்றேன்.

அதில் இருக்கின்ற சிக்கல் என்னவென்றால் அவ்வாறானவர்களை தடுப்பு முகாமுக்குக் கொண்டுபோக எத்தனிக்கிறார்கள். அப்படியானால் 14 நாட்கள் அவர்களைக் கொண்டுபோய் வைத்திருக்கக்கூடும்.

ஆகவே, முடியுமான மக்கள் அங்கு சென்று தங்களுடைய மனநிலையை வெளிப்படுத்தும் வண்ணம் நாங்கள் நடவடிக்கையில் இறங்கலாம்.

ஆனால், எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் இரண்டு விடயங்களை அன்றைய தினம் செய்ய இருக்கின்றோம்.

இறந்த மக்களினுடைய நினைவாக பயன்தரும் மரங்களை நாட்ட இருக்கின்றோம். இதை 16ஆம் 17ஆம் 18ஆம் திகதிகளில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இதேவேளை, உலகம் பூராகவும் எங்களுடைய தமிழ் உறவுகள் அன்றைய தினம் அதாவது 18ஆம் திகதி மாலை 6 மணி 18 நிமிடத்திற்கு ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டிலே இறந்தவர்களை நினைத்து விளக்குகள் ஏற்ற வேண்டும்.

இது இலங்கையில் மாத்திரமன்றி எத்தனையோ நாடுகளிலே அன்றைய தினம் நடைபெறுகின்றது. உதாரணமாக எங்களுடைய நாட்டிலே அந்த நேரத்தில் செய்யும் போது அவுஸ்திரேலியாவில் 5 அல்லது 6 மணித்தியாலம் வித்தியாசமாக இருக்கும். இங்கிலாந்தில் வித்தியாசமாக இருக்கும்.

ஆகவே, அந்தந்த நாடுகளிலேயே நாங்கள் விளக்குகளை ஏற்ற இருக்கின்றோம். விளக்குகளை ஏற்றி இறந்தவர்களை நினைத்து அவர்களுடைய எதிர்பார்ப்பின்படி வருங்காலம் நல்லதொரு காலமாக வடகிழக்கு மாகாண மக்களுக்கு அமைய வேண்டும் என்று சிந்திப்போமாக எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மதுச்சாலைகளை திறக்கும் முடிவை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர கோரிக்கை

(கொழும்பு)

மதுபான சாலைகளைத் திறப்பதற்கு அனுமதியளித்துள்ள முடிவை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளது.

நாட்டில் கொரோனா பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் போது கடந்த மார்ச் 20ஆம் திகதிக்குப் பின்னர் மதுபான சாலைகள் மூடப்பட்ட நிலையில் கடந்த மாதம் 21ஆம் திகதி மீளத் திறக்க அனுமதிக்கப்பட்டது.

எனினும் அன்றைய தினத்துடன் மறு அறிவித்தல்வரை மதுபான சாலைகள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் 3 வாரங்களின் பின்னர் மதுபான சாலைகளைத் திறக்க அனுமதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில் மதுபான சாலைகளைத் திறப்பதற்கு அனுமதியளித்துள்ள முடிவை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளது. (ம-3)

### சட்டமா அதிபர் ஆஜராக மறுப்பு

# வேறு சட்டத்தரணிகளை நாடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராக முடியாத நிலையில் உள்ளதாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா அறிவித்ததை அடுத்து வேறு சட்டத்தரணிகளை நாடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என அறிய முடிகின்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் விசேட கூட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தும் திகதியை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பான பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஏற்கனவே நீதிமன்றத்தில் அவரை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு வழக்கறிஞரை நியமித்திருந்தார். இருப்பினும், மற்ற இரண்டு உறுப்பினர்களைப் பற்றி முடிவு உறுதி செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் வழக்குகளில் ஒரு சுயாதீன ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப் படுத்த சட்டமா அதிபரை நியமிக்க வேண் டும் என்ற முடிவை தான் எதிர்பார்ப்பதாக பேரா சிரியர் ஹூல் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் திகதியை சவால் செய்யும் மனுக்கள் கடந்த திங்கட்கிழமை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி, சட்டமா அதிபர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தி மட்டுமே சட்டமா அதிபர் முன்னிலையாவார் என உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்த 7 மனுக்களை எதிர்வரும் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (ம-3)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**

**பொன்னையா நாகராசா**

(கைவேலி ஆஞ்சநேயர் கோவில் பூசாரி)



(C-9575)

கடந்த (16.04.2020) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த பொன்னையா நாகராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (16.05.2020) சனிக்கிழமை 01ஆம் வட்டாரம் கைவேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய நாள் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1 ஆம் வட்டாரம், கைவேலி,
புதுக்குடியிருப்பு

தகவல் - குடும்பத்தினர்
077 026 1470

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

(C-9584) எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
- மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240 (C-9584)

**Personal Group Class**

இரசாயனவியல் (A/L) 2020, 2021, 2022, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.

சி.அங்கதன் B.Sc (Chem.Spl)

தொடர்பு - 075 436 4510 (2823)

**பணிப்பெண் தேவை**

இணுவிலில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணி புரிய பணிப்பெண் தேவை.

(2822) தொடர்பு -
077 401 6412

**வீடு வாடகைக்கு**

சென். ஜோன் பொஸ்கோ பாடசாலை அருகில் றக்கா வீதியில் 4 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

(தரகர் தேவையில்லை)

தொடர்பு - 071 822 9630,
(2826) 076 694 5211


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.